

TNPSC குரூப் 2A Mains 2025

தாள் II வினாத்தாள் – விடை, விளக்கத்துடன்

Group 2A Mains 2025 Question Paper with Answers (Tamil + English)

GST2AM/2025

2025 வினாத்தாளில் பகுதி அ பொது அறிவு (வினா 1–100), பகுதி ஆ திறனறிவு (101–140), பகுதி இ பொதுத் தமிழ் (141–200) இருந்தன. இப்போதைய (2026) தேர்வு முறையில் பொதுத் தமிழ் இல்லை; எனவே இங்கே வினா 1–140 மட்டும்.

Shanmugam IAS Academy · Coimbatore · Madurai · Online · 99941 46662

shanmugamiasacademy.in/tnpsc-group-2a-mains

வினா 1 · அலகு III

பின்வரும் OSI அடுக்குகளை வரிசைப்படுத்தவும்.

(1) தரவு இணைப்பு அடுக்கு

(2) வன் அடுக்கு

(3) கடத்தி அடுக்கு

(4) இணைவலை அடுக்கு

(A) (2), (1), (4), (3)
(B) (2), (3), (1), (4)
(C) (4), (3), (2), (1)
(D) (3), (1), (4), (2)

Arrange the following OSI layers in order

(1) Data Link Layer

(2) Physical Layer

(3) Transport Layer

(4) Network Layer

(A) (2), (1), (4), (3)
(B) (2), (3), (1), (4)
(C) (4), (3), (2), (1)
(D) (3), (1), (4), (2)

விடை: (A) (2), (1), (4), (3) – OSI மாதிரியில் கீழிருந்து: வன் (Physical, 1) → தரவு இணைப்பு (2) → இணைவலை (Network, 3) → கடத்தி (Transport, 4) அடுக்கு.

OSI model from the bottom: Physical (1st) → Data Link (2nd) → Network (3rd) → Transport (4th) layer.

வினா 2 · அலகு III

கூற்று [A] : மனிதர்களில் மரபியல் மைட்டோகாண்ட்ரியல் mtDNA ஒவ்வொருவரும் தங்கள் தாயிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்கள்.
காரணம் [R] : mtDNA-யை தாய் சார்ந்த சகோதரர் மற்றும் சகோதரிகளிடமோ அல்லது தாய் மற்றும் மகளிடமோ இருந்தாலும் சடுதி மாற்றம் இல்லாமல் ஒரே மாதிரியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

(A) [A] சரி ஆனால் [R] தவறு
(B) [A] மற்றும் [R] சரி மற்றும் [R], [A]விற்கான சரியான விளக்கம்
(C) [A] தவறு [R] சரி
(D) [A] மற்றும் [R] சரி, ஆனால் [R], [A]விற்கான சரியான விளக்கம் இல்லை

Assertion [A] : In humans, individuals inherit Mitochondrial DNA strictly from their mothers.
Reason [R] : Therefore, the mtDNA sequences obtained from maternally related individuals such as a brother and a sister (or) a mother and a daughter exactly match each other when there is no mutation in either of cases.

(A) [A] is true but [R] is false
(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]
(C) [A] is false, [R] is true
(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]

விடை: (D) [A] மற்றும் [R] சரி, ஆனால் [R], [A]விற்கான சரியான விளக்கம் இல்லை – mtDNA தாயிடமிருந்து மட்டுமே வருவதால் தாய்வழி உறவினர்களிடம் அது ஒரே மாதிரி இருக்கும். [R] என்பது [A]-வின் விளைவு ('Therefore'); [A]-விற்கான விளக்கம் அல்ல.

mtDNA is inherited only from the mother, so maternal relatives share identical mtDNA (barring mutation). [R] is a consequence of [A] ('Therefore'), not its explanation.

வினா 3 · அலகு III

IVF முறையில் விந்தணுவும் அண்டமும் இணைவது பின்வருவனவற்றில் எதில் நடைபெறுகிறது?

(A) யோனிக் குழாய்
(B) ஃபலோப்பியன் குழாய்
(C) வளர்ப்பு ஊடகம்
(D) கருப்பை

In IVF technique, fusion of sperm and ovum takes place in

(A) Vagina
(B) Fallopian tube
(C) Culture medium
(D) Uterus

விடை: (C) வளர்ப்பு ஊடகம் – IVF (உடல் வெளிக் கருவுறுதல்) – விந்தணுவும் அண்டமும் ஆய்வகத்தில் வளர்ப்பு ஊடகத்தில் இணைகின்றன; பின்னர் கருவை கருப்பையில் வைப்பர்.

In vitro fertilisation means fertilisation outside the body – sperm and ovum fuse in a culture medium in the laboratory; the embryo is later transferred to the uterus.

வினா 4 · அலகு III

கீழ்க்கண்டவற்றில் சரியான இணையைக் கண்டுபிடிக்கவும்.

மைக்ரோ பரப்புதல் மற்றும் மர இனங்களை மேம்படுத்தும் முறை

(1) குளோனல் பெருக்க முறை – புரோசோபிஸ் சினிரேரியா

(2) புரோட்டோ பிளாஸ்ட் வளர்ப்பு மற்றும் மரபணு பொறியியல் முறை – டால்பர்ஜியா சிசு

(3) உடலியல் கரு உருவாக்கம் – குப்ரஸஸ் அரிசோனிகா

(4) ஜெர்ம்பிளாசம் பாதுகாப்பு – டெக்டோனு கிராண்டிஸ்

(A) (1) மற்றும் (3) சரி
(B) (1) மற்றும் (4) சரி
(C) (2) மற்றும் (3) சரி
(D) (3) மற்றும் (4) சரி

Choose the right matches among type

The methods employed in micro propagation and improvement of tree species are

(1) Clonal multiplication – Prosopis cineraria

(2) Protoplast culture and genetic engineering – Dalbergia sisso

(3) By somatic embryogenesis – Cupressus arizonica

(4) Germplasm conservation – Tectona grandis

(A) (1) and (3) correct
(B) (1) and (4) correct
(C) (2) and (3) correct
(D) (3) and (4) correct

விடை: (B) (1) மற்றும் (4) சரி – புரோசோபிஸ் சினிரேரியாவில் குளோனல் பெருக்கம் நிறுவப்பட்டுள்ளது; தேக்கு (டெக்டோனு கிராண்டிஸ்) ஜெர்ம்பிளாசம் பாதுகாப்பிற்கான எடுத்துக்காட்டு. குப்ரஸஸ் அரிசோனிகாவில் செய்யப்பட்டது மொட்டு உருவாக்கம்; உடலியல் கரு உருவாக்கம் அல்ல.

Clonal multiplication is established for Prosopis cineraria and teak (Tectona grandis) is a standard case of in vitro germplasm conservation; the Cupressus arizonica tissue-culture work is adventitious-bud organogenesis, not somatic embryogenesis.

TNPSC இந்த வினாவை நிபுணர் குழுவின் இறுதி முடிவுக்கு அனுப்பியுள்ளது.

வினா 5 · அலகு IV

பின்வருவனவற்றில் எது தவறாக இணைக்கப்பட்டுள்ளது?

(i) அடல் டிங்கரிங் ஆய்வகம் – உயர்நிலை பள்ளி மாணவர்களிடையே ஆராய்ச்சிக்கான புதுமையான மனநிலையை வளர்க்கிறது

(ii) கிரிஷி நீவ் – விவசாயத்தில் தொழில் நுட்பத் தலையீடுகளை ஊக்குவிக்கும் தளம்

(iii) பல்ணா – பணிபுரியும் பெண்களுக்குப் பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் மருத்துவ உதவி போன்ற ஆதரவுச் சேவைகளை வழங்குகிறது

(iv) உன்னதி – வேலை தேடுபவர்களுடன் வேலை வழங்குபவர்களைப் பொருத்த செயற்கை நுண்ணறிவுடன் ஒருங்கிணைக்கப்பட்ட தொழில்நுட்பத் தளம்

(A) (iv) மட்டும்
(B) (i) மற்றும் (ii) மட்டும்
(C) (iii) மட்டும்
(D) (i) மற்றும் (iv) மட்டும்

Which of the following is incorrectly paired?

(i) Atal Tinkering Lab – Nurtures an innovative mindset towards research amongst high school students

(ii) Krishi Neev – Platform to promote technology interventions in agriculture

(iii) Palna – Provides support service like safe accommodation and Medical assistance to working women

(iv) Unnati – Technology platform integrated with artificial intelligence to match job providers with seekers

(A) (iv) only
(B) (i) and (ii) only
(C) (iii) only
(D) (i) and (iv) only

விடை: (C) (iii) மட்டும் – பல்ணா (மிஷன் சக்தி) என்பது பணிபுரியும் தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகத் (Creche) திட்டம்; பணிபுரியும் பெண்களுக்கான தங்குமிடம் 'சகி நிவாஸ்'.

Palna (Mission Shakti) is the National Creche scheme – day-care for children of working mothers; safe accommodation for working women is Sakhi Niwas.

வினா 6 · அலகு III

பின்வருவனவற்றை பொருத்துக :

(a) ஹைட்ரஜன் குண்டு – 1. கட்டுப்பாடற்ற அணுக்கரு பிளவு வினை

(b) திறன் உலை – 2. கட்டுப்படுத்தப்பட்ட இணைவு வினை

(c) பிளாஸ்மாவின் காந்தவியல் அடக்கல் – 3. கட்டுப்படுத்தப்பட்ட அணுக்கரு பிளவு வினை

(d) அணுகுண்டு – 4. அணுக்கரு பிளவு - இணைவு வினை

(A) 2 1 4 3 (B) 1 3 4 2

(C) 3 4 1 2 (D) 4 3 2 1

Match the following :

(a) Hydrogen bomb – 1. Uncontrolled nuclear fission reaction

(b) Power reactor – 2. Controlled fusion reaction

(c) Magnetic confinement of plasma – 3. Controlled fission reaction

(d) Atom bomb – 4. Fission - Fusion reaction

(A) 2 1 4 3 (B) 1 3 4 2

(C) 3 4 1 2 (D) 4 3 2 1

விடை: (D) 4 3 2 1 – ஹைட்ரஜன் குண்டு – பிளவு தூண்டலுடன் இணைவு (4); திறன் உலை – கட்டுப்படுத்தப்பட்ட பிளவு (3); காந்த அடக்கல் (டோகாமாக்) – கட்டுப்படுத்தப்பட்ட இணைவு (2); அணுகுண்டு – கட்டுப்பாடற்ற பிளவு (1).

H-bomb uses a fission trigger + fusion (4); power reactor = controlled fission (3); magnetic confinement (tokamak) = controlled fusion (2); atom bomb = uncontrolled fission (1).

வினா 7 · அலகு III

பின்வருவனவற்றில் எது/எவை டிப் பேனு நானே லித்தோகிராபி (DPN) பற்றி சரியானவை?

(i) இது ஒரு நேரடி முறை

(ii) இது தண்ணீரது மூலக்கூறுகள் பரவுதல் மூலம் வேலை செய்கிறது

(iii) இது பல்வேறுபட்ட பொருட்களின் வடிவங்களை வரைகிறது

(iv) இது ஒரு அதிவேக ஸ்கேன் செயல்முறை

(A) (i) மட்டும் (B) (ii) மட்டும்

(C) (i), (ii) மற்றும் (iii) மட்டும் (D) மேற்கூறிய அனைத்தும்

Which of the following is/are correct about Dip-Pen Nano Lithography (DPN)?

(i) It is a direct method

(ii) It works on diffusion through water molecules

(iii) It patterns a variety of materials

(iv) It is a fast scanning process

(A) (i) only (B) (ii) only

(C) (i), (ii) and (iii) only (D) all of the above

விடை: (C) (i), (ii) மற்றும் (iii) மட்டும் – DPN – AFM முனையால் நேரடியாக எழுதும் முறை; மை மூலக்கூறுகள் நீர் மெனிஸ்கஸ் வழியாகப் பரவுகின்றன; பல பொருட்களை வரையலாம். இது ஒவ்வொன்றாக வரையும் மெதுவான முறை – (iv) தவறு.

DPN is a direct-write AFM-tip method; ink molecules diffuse to the surface through a water meniscus and many materials can be patterned. It is a serial, slow process – so (iv) is wrong.

வினா 8 · அலகு II

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் நிறுவப்பட்ட உலகளாவிய ஒரு நிறுத்த மையங்களின் (OSCs) முதன்மை நோக்கம்

(A) மாணவர் மற்றும் ஆசிரியர் பரிமாற்ற திட்டத்தை ஊக்குவிப்பதற்காக (B) உயர் கல்வி நிறுவனங்களிடையே ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை எளிதாக்க

(C) பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் உள்ள பெண்களுக்கு விரிவான உதவிகளை வழங்க (D) நெருக்கடியின் போது வெளிநாட்டில் படிக்கும் இந்திய மாணவர்களுக்கு ஆதரவளிக்க

The primary objective of Global One-Stop Centres (OSCs) established by Ministry of external affairs is

(A) Promote student and faculty exchange programme (B) Facilitate research and development among Higher Education Institutions

(C) Provide comprehensive assistance to women in vulnerable situations (D) Support Indian students studying abroad during crisis

விடை: (C) பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் உள்ள பெண்களுக்கு விரிவான உதவிகளை வழங்க – 2024-இல் வெளிநாடுகளில் உள்ள 9 இந்தியத் தூதரகங்களில் ஒரு நிறுத்த மையங்கள் அனுமதிக்கப்பட்டன – சிக்கலில் உள்ள இந்தியப் பெண்களுக்கு ஆலோசனை, சட்ட, மருத்துவ, தங்குமிட உதவி வழங்க.

In 2024 the Government approved 9 One Stop Centres in Indian Missions abroad (Gulf countries, Singapore, Toronto etc.) to give counselling, legal, medical and shelter help to Indian women in distress.

வினா 9 · அலகு IV

கீழ்க்கண்ட நிகழ்வுகளை காலவரிசைப்படுத்துக.

பின்வரும் வறுமை ஒழிப்பு திட்டங்களை காலவரிசைப்படி ஒழுங்குபடுத்தவும்

(1) சம்பூர்ண கிராமீன் ரோஸ்கர் யோஜனா

(2) ஸ்வர்ணஜெயந்தி கிராம் ஸ்வரோஸ்கர் யோஜனா

(3) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

(4) வேலைக்கான உணவுத் திட்டம்

(A) (1), (2), (3), (4)
(B) (4), (3), (2), (1)
(C) (2), (4), (3), (1)
(D) (3), (4), (1), (2)

Arranging chronological order/event type

Arrange the following poverty alleviation programmes in chronological order

(1) Sampoorna Grameen Rozgar Yojana

(2) Swarnajayanthi Gram Swarozgar Yojana

(3) Integrated Rural Development Project

(4) Food for Work Program

(A) (1), (2), (3), (4)
(B) (4), (3), (2), (1)
(C) (2), (4), (3), (1)
(D) (3), (4), (1), (2)

விடை: (B) (4), (3), (2), (1) – வேலைக்கான உணவுத் திட்டம் 1977 → IRDP 1978-79 (நாடு முழுவதும் 1980) → SGSY 1999 → SGRY 2001.
Food for Work 1977 → IRDP 1978-79 (nationwide 1980) → SGSY 1 April 1999 → SGRY 25 September 2001.

வினா 10 · அலகு IV

கூற்று [A] : பெண்களுக்கான மாற்று வேலை வாய்ப்பு, திறன் பயிற்சி அல்லது கடன் வசதி இல்லாதது அவர்களை வறுமையில் வைத்திருக்கும் மற்றொரு காரணியாகும்.

காரணம் [R] : வறுமை தொடர்ந்து பெண்ணிய அடையாளமாக மாறி வருகிறது.

(A) [A] உண்மை ஆனால் [R] தவறு
(B) [A] மற்றும் [R] இரண்டும் உண்மை, [R] என்பது [A] விற்கான சரியான விளக்கம்
(C) [A] தவறு ஆனால் [R] உண்மை
(D) [A] மற்றும் [R] இரண்டும் உண்மை ஆனால் [R] என்பது [A]விற்கான சரியான விளக்கம் அல்ல

Assertion [A] : The lack of alternate employment, skill training (or) credit facilities for women, is another factor that keeps them in poverty.

Reason [R] : Poverty is increasingly becoming a feminine identity.

(A) [A] is true but [R] is false
(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]
(C) [A] is false but [R] is true
(D) Both [A] and [R] are true, but [R] is not correct explanation of [A]

விடை: (D) [A] மற்றும் [R] இரண்டும் உண்மை ஆனால் [R] என்பது [A]விற்கான சரியான விளக்கம் அல்ல – இரண்டும் உண்மை (வறுமையின் பெண்மயமாதல்). ஆனால் வேலை, திறன், கடன் வசதி இல்லாமை பெண்களின் வறுமைக்குக் காரணம்; [R] அதற்கு விளக்கம் அல்ல.
Both are true (feminisation of poverty), but lack of jobs, skills and credit is a cause of women's poverty; 'poverty becoming feminine' does not explain it.

வினா 11 · அலகு II

இந்திய அரசியலமைப்பின் _____ பிரிவு, தொழிற்சாலைகள், சுரங்கங்கள் அல்லது வேறு எந்த ஆபத்தான தொழிலிலும் குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்கிறது.

(A) 21 A
(B) 24
(C) 17
(D) 39

Article _____ of the Indian Constitution Prohibits the employment of children in Factories, Mines, or any other hazardous occupation.

(A) 21 A
(B) 24
(C) 17
(D) 39

விடை: (B) 24 – பிரிவு 24: 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளைத் தொழிற்சாலை, சுரங்கம் அல்லது ஆபத்தான வேலையில் அமர்த்தக் கூடாது.
Article 24: no child below 14 years shall be employed in any factory, mine or other hazardous employment.

வினா 12 · அலகு II

கீழ்க்காணும் திட்டங்களை அந்தந்த வருடத்துடன் பொருத்துக.

(a) நீங்கள் நலமா – 1. 2000

(b) மனு நீதி – 2. 2021

(c) குறள் முற்றோதல் – 3. 2024

(d) இல்லம் தேடி கல்வி – 4. 1969

(A) 2 3 4 1 (B) 1 2 3 4

(C) 3 4 1 2 (D) 4 1 2 3

Match the schemes with years.

(a) Neengal Nalama – 1. 2000

(b) Manu Needhi – 2. 2021

(c) Kural Mutrodhal – 3. 2024

(d) Illam Thedi Kalvi – 4. 1969

(A) 2 3 4 1 (B) 1 2 3 4

(C) 3 4 1 2 (D) 4 1 2 3

விடை: (C) 3 4 1 2 – நீங்கள் நலமா – மார்ச் 2024; மனு நீதித் திட்டம் – 1969; குறள் முற்றோதல் பரிசுத் திட்டம் – 2000; இல்லம் தேடி கல்வி – 2021 (கோவிட் கற்றல் இழப்பு ஈடு).

Neengal Nalama – launched March 2024; Manu Needhi scheme – 1969; Kural Mutrodhal prize scheme – 2000; Illam Thedi Kalvi – 2021 (post-COVID learning recovery).

வினா 13 · அலகு IV

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தின் மூலமாக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் திறன் பயிற்சிக்கு வழிகாட்டு அமைக்கப்பட்ட ஒரு தளம்

(A) 'இளைய' (B) 'இளைய'

(C) 'நான் முதல்வன்' (D) 'நீயே உனக்கு ராஜா' திட்டம்

Tamil Nadu skill development corporations established a new platform by using AI Technology to guide the youth's employment and skill training is called as

(A) 'Inaya' (B) 'Ilaya'

(C) 'Naan Mudhalvan' (D) 'You are your own king' Scheme

விடை: (B) 'இளைய' – 'இளைய' (Ilaya) – TNSDC உருவாக்கிய செயற்கை நுண்ணறிவு WhatsApp சாட்பாட்; வேலை தேடுவோருக்கு வேலை, திறன் பயிற்சி வழிகாட்டுகிறது.

'Ilaya' is TNSDC's AI-powered WhatsApp chatbot (built with Gupshup) that guides job seekers to jobs and skill training.

வினா 14 · அலகு IV

_____ மாநிலம் 2022-23 கணக்கெடுப்பின் போது அதிக வேலையின்மை விகிதம் கொண்ட மாநிலம்.

(A) கேரளா (B) ஹரியானா

(C) பஞ்சாப் (D) தமிழ்நாடு

_____ state has the highest percentage of unemployment during the year 2022-23.

(A) Kerala (B) Haryana

(C) Punjab (D) Tamil Nadu

விடை: (A) கேரளா – PLFS 2022-23 (வழக்கமான நிலை, 15+): கேரளா சுமார் 7.0% – ஹரியானா, பஞ்சாப் (சுமார் 6.1%), தமிழ்நாடு (சுமார் 4.3%) ஆகியவற்றைவிட அதிகம்.

PLFS 2022-23 (usual status, 15+): Kerala about 7.0% – higher than Haryana and Punjab (about 6.1%) and Tamil Nadu (about 4.3%).

வினா 15 · அலகு IV

2021-2022 ஆம் கல்வி ஆண்டில் தமிழ்நாட்டில் உயர் கல்விப் பயில்வோரின் மொத்தப் பதிவு _____ உள்ளது.

(A) 45 சதவிகிதம் (B) 46 சதவிகிதம்

(C) 47 சதவிகிதம் (D) 48 சதவிகிதம்

The Total Gross Enrollment Ratio of Tamil Nadu in higher education during 2021-2022 was _____.

(A) 45 percent (B) 46 percent

(C) 47 percent (D) 48 percent

விடை: (C) 47 சதவிகிதம் – AISHE 2021-22: தமிழ்நாட்டின் உயர்கல்வி மொத்தச் சேர்க்கை விகிதம் 47.0% (இந்திய சராசரி 28.4%).

AISHE 2021-22: Tamil Nadu's GER (18–23 years) in higher education was 47.0%, against the national 28.4%.

வினா 16 · அலகு IV

விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்பிற்கான பின்வரும் கடன் திட்டங்களில் எது தவருக இணைக்கப்பட்டுள்ளது?

(i) கடன் உத்தரவாதத் திட்டம் – நேரடி பண நிதி

(ii) மெஸ்ஸானென் மூலதன உதவி – திருப்பிச் செலுத்தமுடியாத கடன்

(iii) சுழல் நிதி ஆதரவு – சலுகை கடன்

(iv) நப்கிசான் – தமிழ்நாடு அரசுடன் இணைந்து கடன் திட்டங்களைச் செயல்படுத்துதல்

(A) (i) மற்றும் (iv)
(B) (i) மற்றும் (ii)
(C) (iii) மற்றும் (iv)
(D) (ii) மற்றும் (iii)

Which of the following credit schemes for Farmers Producers Organisations (FPOs) is incorrectly paired?
(i) Credit guarantee scheme – Direct cash grants
(ii) Mezzanine capital assistance – Non repayable credit
(iii) Revolving fund support – Concessional credit
(iv) Nabkisan – Initiates credit schemes with T.N.
(A) (i) and (iv)
(B) (i) and (ii)
(C) (iii) and (iv)
(D) (ii) and (iii)

விடை: (B) (i) மற்றும் (ii) – கடன் உத்தரவாதத் திட்டம் வங்கிகளுக்கு உத்தரவாதம் தருகிறது – நேரடி பண நிதி அல்ல; மெஸ்ஸானென் மூலதனம் திருப்பிச் செலுத்த வேண்டிய சலுகைக் கடன். ஆகவே (i), (ii) தவறு.
A credit guarantee scheme gives collateral-free guarantee cover to lenders, not cash grants; mezzanine capital is a repayable soft loan, not a non-repayable credit. Revolving fund (concessional credit) and NABKISAN (credit schemes with TN Govt) are correct.

வினா 17 · அலகு IV

தமிழ்நாடு பொருளாதாரத்தின் இயல்புகளைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது உண்மை?

(i) ஜிஎஸ்டிபி தனிநபர் வருமானத்தில் தமிழ்நாடு 7-வது உயர்ந்த இடத்தில் உள்ளது

(ii) தமிழ்நாடு குறைந்த தொழில்கள் மற்றும் சிறு சேவைத் துறைகளைக் கொண்டுள்ளது

(iii) இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது பெரிய பொருளாதாரத்தை உடையது

(A) (i) மட்டும்
(B) (i) மற்றும் (ii) மட்டும்
(C) (iii) மட்டும்
(D) (ii) மற்றும் (iii) மட்டும்

Which of the following statements are True about features of Tamil Nadu Economy?
(i) Tamil Nadu has 7th highest GSDP per capita
(ii) Tamil Nadu has low industries and small service sectors
(iii) Tamil Nadu is second largest economy among the states in India
(A) (i) only
(B) (i) and (ii) only
(C) (iii) only
(D) (ii) and (iii) only

விடை: (C) (iii) மட்டும் – மகாராஷ்டிராவுக்கு அடுத்து தமிழ்நாடு இரண்டாவது பெரிய மாநிலப் பொருளாதாரம்; தொழில், சேவைத் துறைகள் வலுவானவை – (ii) தவறு. (i)-(iii) சேர்ந்த தெரிவு இல்லாததால் (iii) மட்டும் சரி.
Tamil Nadu is India's second-largest state economy (after Maharashtra) with a large industrial and service base, so (ii) is false. No option pairs (i) with (iii), so (iii) only is the answer.

வினா 18 · அலகு V

பின்வரும் காலநிலை மாநாடுகளையும் அது சார்ந்த கருத்தையும் பொருத்துக.

(a) கியோட்டோ நெறிமுறை – 1. உலக வெப்பநிலை உயர்வை கட்டுப்படுத்துதல்

(b) ரியோ பூமி உச்சி மாநாடு – 2. ஓசோன் படலத்தை பாதுகாத்தல்

(c) பாரிஸ் ஒப்பந்தம் – 3. நிலையான வளர்ச்சிக்கான உலகளாவிய கட்டமைப்பு

(d) மாண்ட்ரீல் நெறிமுறை – 4. உமிழ்வை குறைப்பதற்கான அர்ப்பணிப்பு

(A) 2 3 1 4
(B) 4 2 3 1
(C) 4 3 1 2
(D) 2 1 4 3

Match the following climate conferences with respective themes.
(a) Kyoto protocol – 1. Limit global temperature rise
(b) Rio Earth summit – 2. Protecting Ozone layer
(c) Paris Agreement – 3. Global Framework for sustainable development
(d) Montreal protocol – 4. Commitment to reduce emissions
(A) 2 3 1 4
(B) 4 2 3 1
(C) 4 3 1 2
(D) 2 1 4 3

விடை: (C) 4 3 1 2 – கியோட்டோ (1997) – உமிழ்வு குறைப்பு கடப்பாடு; ரியோ (1992) – அஜெண்டா 21, நிலையான வளர்ச்சி; பாரிஸ் (2015) – வெப்ப உயர்வை 2°C-க்குக் கீழ் கட்டுப்படுத்தல்; மாண்ட்ரீல் (1987) – ஓசோன் படலப் பாதுகாப்பு.
Kyoto (1997) – binding emission-reduction commitments; Rio Earth Summit (1992) – Agenda 21, sustainable development framework; Paris (2015) – keep warming well below 2°C; Montreal (1987) – protect the ozone layer.

வினா 19 · அலகு V

கூற்று [A] : படிம எரிபொருள்களிலிருந்து ஒரு விலக்க மாற்றத்திற்கான வெளிப்படையான அழைப்பினுல் உலகளாவிய காலநிலை நடவடிக்கையில், COP28, ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை அடைந்தது.

காரணம் [R] : பாரிஸ் ஒப்பந்தத்தின் முக்கிய அங்கமான குளோபல் ஸ்டாக்டேக், காலநிலை நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டிய அவசரத் தேவையை எடுத்துரைத்தது.

(A) [A] மற்றும் [R] இரண்டும் உண்மை, மேலும் [R] என்பது [A] இன் சரியான விளக்கமாகும்

(B) [A] மற்றும் [R] இரண்டும் உண்மை, ஆனால் [R] என்பது [A] இன் சரியான விளக்கமல்ல

(C) [A] உண்மை, ஆனால் [R] என்பது தவருனது

(D) [A] என்பது தவருனது, ஆனால் [R] என்பது உண்மை

Assertion [A] : COP28 marked a significant milestone in global climate action by explicitly calling for a transition away from fossil fuels.

Reason [R] : The Global stocktake, a key component of the Paris Agreement, highlighted the urgent need to accelerate climate action.

(A) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]

(B) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]

(C) [A] is true, but [R] is false

(D) [A] is false, but [R] is true

விடை: (A) [A] மற்றும் [R] இரண்டும் உண்மை, மேலும் [R] என்பது [A] இன் சரியான விளக்கமாகும் – COP28-இல் (துபாய், 2023) நிறைவுற்ற முதல் உலகளாவிய மதிப்பீடு (Global Stocktake) உலகம் இலக்கை விட்டு விலகியுள்ளதைக் காட்டியது; அதன் முடிவே 'படிம எரிபொருளிலிருந்து விலகும் மாற்றம்' என அழைப்பு விடுத்தது.

The first Global Stocktake concluded at COP28 (Dubai, 2023) found the world off-track; its decision (1/CMA.5) is the text that calls for 'transitioning away from fossil fuels'.

வினா 20 · அலகு V

அகஸ்தியமலை உயிர்க்கோளக் காப்பகத்தில் காணப்படும் அழிந்து வரும் இனங்கள் என்பவை

(i) சிங்கவால் குரங்கு, ஸ்லின்டர் லோரிஸ், பெரிய பைட் ஹார்ன்பில்

(ii) ருத்திராட்ச மரம், கருப்பு பிளம், காட்டு டஹ்மான், மற்றும் காப் மரம்

(iii) மெல்லிய லோரிஸ், சிங்கவால் குரங்கு, கருப்பு பிளம், ருத்ராட்ச மரம், மற்றும் பச்சைக் குழி வைப்பர்

(A) (i) மற்றும் (ii) மட்டும்

(B) (ii) மற்றும் (iii) மட்டும்

(C) (iii) மற்றும் (i) மட்டும்

(D) (i), (ii) மற்றும் (iii)

The threatened species found in the Agasthiayamalai Biosphere Reserve are

(i) Lion-tailed macaque, slender loris and great pied hornbill

(ii) Rudraksh tree, black plums, wild dahman and gaub tree

(iii) Slender loris, lion-tailed macaque, black plums rudraksh tree and green pit viper

(A) (i) and (ii) only

(B) (ii) and (iii) only

(C) (iii) and (i) only

(D) (i), (ii) and (iii)

விடை: (A) (i) மற்றும் (ii) மட்டும் – அகஸ்தியமலை உயிர்க்கோளக் காப்பகத்தின் அழிவாய்ப்பு விலங்குகள்: சிங்கவால் குரங்கு, மெல்லிய லோரிஸ், பெரிய இருவாச்சி; தாவரங்கள்: ருத்ராட்சம், நாவல், காட்டு தாமன், காப் மரம். (iii)-இல் உள்ள பச்சைக் குழிவிரியன் அப்பட்டியலில் இல்லை.

Threatened fauna of Agasthyamalai BR: lion-tailed macaque, slender loris, great pied hornbill; threatened flora: rudraksha, black plum, wild dhaman, gaub. List (iii) adds green pit viper, not in the threatened list.

வினா 21 · அலகு V

பின்வரும் அறிக்கைகளைக் கருத்தில் கொள்க.

(a) வனங்கள் வெள்ளம் மற்றும் வறட்சியை ஒழுங்குபடுத்துகின்றன

(b) ஒவ்வொரு வருடமும், கிட்டத்தட்ட 10% வெப்பமண்டல காடுகள் இழக்கப்படுகின்றன

(c) உலகெங்கிலும் உள்ள காடுகளில் கிட்டத்தட்ட 47% வெப்பமண்டல காடுகள் ஆகும்

(d) உலகின் 45% காடுகள் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் உள்ளன

சரியான அறிக்கைகள் என்பவை :

(A) (b) மற்றும் (c)

(B) (a), (b) மற்றும் (c)

(C) (a) மற்றும் (c)

(D) (c) மற்றும் (d)

Consider the following statements.

(a) Forests regulate floods and droughts

(b) Almost 10% of tropical forests are lost each year

(c) Nearly 47% of forests Worldwide are tropical forests

(d) 45% of the World's forest are under protected areas

The correct statements are :

(A) (b) and (c)

(B) (a), (b) and (c)

(C) (a) and (c)

(D) (c) and (d)

விடை: (C) (a) மற்றும் (c) – காடுகள் நீரோட்டத்தை (வெள்ளம்/வறட்சி) ஒழுங்குபடுத்துகின்றன; உலகக் காடுகளில் சுமார் 45–47% வெப்பமண்டலக் காடுகள். ஆண்டு இழப்பு 1%-க்கும் குறைவு; பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவை சுமார் 18% மட்டுமே.

Forests regulate water flow (floods/droughts) and nearly half (about 45–47%) of the world's forests are tropical. Annual tropical forest loss is well under 1% (not 10%), and only about 18% of forests lie in protected areas (not 45%).

வினா 22 · அலகு III

_____ செயற்கைகோள் 1, ஜனவரி 2024 அன்று இஸ்ரோ காஸ்மிக் எக்ஸ் கதிர்களை ஆய்வு செய்யும் பொருட்டு அனுப்பப்பட்டது.

(A) ஆஸ்ட்ரோசாட்
(B) ஆதித்யா - 1
(C) சந்திரயான் - 1
(D) எக்ஸ்போசாட்

_____ satellite was sent by ISRO on 1st January 2024 to study cosmic X rays.

(A) ASTROSAT
(B) Aditya - 1
(C) Chandrayan – 1
(D) Xposat

விடை: (D) எக்ஸ்போசாட் – XPoSat (எக்ஸ்-கதிர் போலரிமீட்டர் செயற்கைக்கோள்) 1 ஜனவரி 2024 அன்று PSLV-C58 மூலம் ஏவப்பட்டது – காஸ்மிக் எக்ஸ்-கதிர் முனைவாக்கம் ஆய்வு.
XPoSat (X-ray Polarimeter Satellite) was launched by PSLV-C58 on 1 January 2024 – India's first satellite to study polarisation of cosmic X-rays.

வினா 23 · அலகு III

மத்திய உப்பு மற்றும் கடல் ஆராய்ச்சி நிறுவனம் எங்கு அமைந்துள்ளது?

(A) கொச்சின்
(B) சென்னை
(C) பவ்நகர்
(D) நரிமணம்

Central salt and marine chemicals Research Institute is located at

(A) Cochin
(B) Chennai
(C) Bhavnagar
(D) Narimanam

விடை: (C) பவ்நகர் – CSIR – மத்திய உப்பு மற்றும் கடல் வேதிப்பொருள் ஆராய்ச்சி நிறுவனம் (CSMCRI) குஜராத்தின் பவ்நகரில் உள்ளது.
CSIR-Central Salt and Marine Chemicals Research Institute (CSMCRI) is at Bhavnagar, Gujarat.

வினா 24 · அலகு V

சுத்தமான காற்றுச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு _____.

(A) 1970
(B) 1972
(C) 1969
(D) 1980

Clean Air Act was passed in the year _____.

(A) 1970
(B) 1972
(C) 1969
(D) 1980

விடை: (A) 1970 – அமெரிக்காவின் முக்கியமான சுத்தமான காற்றுச் சட்டம் 1970-இல் இயற்றப்பட்டது (தேசிய காற்றுத் தர நிர்ணயங்கள்).
The landmark US Clean Air Act was enacted in 1970 (it created national air-quality standards; US EPA set up the same year).

வினா 25 · அலகு V

பின்வரும் பறவைகள் சரணாலயத்தை அதன் மாவட்டத்துடன் பொருத்தவும் :
பறவைகள் சரணாலயம் – மாவட்டங்கள்
(a) வேட்டன்குடி – 1. சிவகங்கை
(b) மயூரா தோட்டம் – 2. அரியலூர்
(c) வெள்ளோடு – 3. தூத்துக்குடி
(d) கரைவெட்டி – 4. ஈரோடு

(A) 4 3 2 1
(B) 1 2 3 4
(C) 1 3 4 2
(D) 3 2 1 4

Match the following Bird Sancturies with their districts :
Bird Sancturies – Districts
(a) Vettangudi – 1. Sivagangai
(b) Mayura Thottam – 2. Ariyalur
(c) Vellode – 3. Thoothukudi
(d) Karaivetti – 4. Erode

(A) 4 3 2 1
(B) 1 2 3 4
(C) 1 3 4 2
(D) 3 2 1 4

விடை: (C) 1 3 4 2 – வேட்டங்குடி – சிவகங்கை; வெள்ளோடு – ஈரோடு; கரைவெட்டி – அரியலூர்; எனவே மயூரா தோட்டம் – தூத்துக்குடி. (C) மட்டுமே பொருந்தும்.
Vettangudi – Sivagangai; Vellode – Erode; Karaivetti – Ariyalur; so Mayura Thottam goes with Thoothukudi. Only option C fits.

வினா 26 · அலகு I

பின்வரும் காலங்களை முறைப்படி வரிசைப்படுத்துக :

(1) வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

(2) சோழர் காலம்

(3) சங்க காலம்

(4) பல்லவர் காலம்

(A) (1), (4), (3), (2)
(B) (2), (4), (1), (3)
(C) (1), (3), (4), (2)
(D) (2), (3), (4), (1)

Arrange the following periods in order :

(1) Prehistoric period

(2) Chola's period

(3) Sangam period

(4) Pallava's period

(A) (1), (4), (3), (2)
(B) (2), (4), (1), (3)
(C) (1), (3), (4), (2)
(D) (2), (3), (4), (1)

விடை: (C) (1), (3), (4), (2) – வரலாற்றுக்கு முற்பட்ட காலம் → சங்க காலம் (கி.மு. 3 – கி.பி. 3 நூ.) → பல்லவர் (கி.பி. 6–9 நூ.) → பிற்காலச் சோழர் (கி.பி. 9–13 நூ.).

Prehistoric → Sangam age (c. 3rd c. BCE–3rd c. CE) → Pallavas (c. 6th–9th c. CE) → Imperial Cholas (9th–13th c. CE).

வினா 27 · அலகு I

கூற்று [A] : வ.உ.சி.க்கு தேசத் துரோகக் குற்றம் சுமத்தப்பட்டு 40 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

காரணம் [R] : சூரத் மாநாட்டில் கலந்து கொண்டு திலகரைப் பின்பற்றி தத்துவத்தை ஆதரித்தார்.

(A) [A] சரி, [R] தவறு
(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R], [A]ன் சரியான விளக்கமாகும்
(C) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R], [A]ன் சரியான விளக்கம் அல்ல
(D) [A] தவறு, [R] சரி

Assertion [A] : V.O.C charged with sedition, was sentenced to forty years of imprisonment.

Reason [R] : He attended Surat Congress session and followed Tilak and preached his philosophy.

(A) [A] is true, [R] is false
(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]
(C) Both [A] and [R] are true and [R] is not the correct explanation of [A]
(D) [A] is false, [R] is true

விடை: (C) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R], [A]ன் சரியான விளக்கம் அல்ல – 1908-இல் வ.உ.சி.க்கு தேசத் துரோகக் குற்றத்திற்காக இரட்டை ஆயுள் (40 ஆண்டு) தண்டனை (பின்னர் குறைப்பு). 1907 சூரத் மாநாட்டில் திலகர் ஆதரவாளராகக் கலந்தார்; ஆனால் வழக்கு திருநெல்வேலி எழுச்சி/கோரல் மில் போராட்ட உரைகளால் – [R] விளக்கம் அல்ல.

In 1908 V.O.C. was convicted of sedition and given two life terms (40 years, later reduced). He did attend the 1907 Surat session as a Tilak follower, but the sedition case arose from his speeches during the Tirunelveli/Coral Mill agitation – so [R] is not the explanation.

வினா 28 · அலகு I

பெண்களுக்கானப் பள்ளியை ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் நிறுவிய இடம்

(A) பம்பாய்
(B) சூரத்
(C) லாகூர்
(D) கல்கத்தா

Ishwar Chandra Vidyasagar setup school for girls at

(A) Bombay
(B) Surat
(C) Lahore
(D) Calcutta

விடை: (D) கல்கத்தா – வித்யாசாகர், பெத்யூனுடன் இணைந்து கல்கத்தாவில் பெண்கள் பள்ளி (1849) தொடங்க உதவினர்; வங்காளத்தில் சுமார் 35 பெண்கள் பள்ளிகளைத் திறந்தார்.

Vidyasagar helped J.E.D. Bethune found the girls' school in Calcutta (1849) and opened about 35 girls' schools in Bengal.

வினா 29 · அலகு I

அறியாமை அகன்று நலம் தோன்றும் எப்போது?

(A) மயக்கம் தெளிந்து மாசற்ற உண்மையை உணர்தல்
(B) கடமையை செய்தல்
(C) கர்ம செயல்
(D) மருத்துவ அறிவு

What have to be realized if you want to overcome the ignorance and feel healthy?

(A) Be aware and believe on the immaculate truth
(B) Duty concious
(C) Karmic Action
(D) Medicinal knowledge

விடை: (A) மயக்கம் தெளிந்து மாசற்ற உண்மையை உணர்தல் – திருக்குறள் 352 (மெய்யுணர்தல்): 'இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி மாசறு காட்சி யவர்க்கு' – மயக்கம் நீங்கி மாசற்ற உண்மையை உணர்ந்தவர்க்கு அறியாமை அகன்று இன்பம் உண்டாகும்.

Thirukkural 352 (Meyyunarthal): 'இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி மாசறு காட்சி யவர்க்கு' – darkness leaves and bliss comes to those who, free from delusion, see the pure truth.

வினா 30 · அலகு I

சரியான விடையைத் பொருந்தச் செய்க :

(a) நீதிக்கட்சி – 1. 1949

(b) தி.மு.க. – 2. 1944

(c) திராவிடர் கழகம் – 3. 1916

(d) சுயமரியாதை இயக்கம் – 4. 1925

(A) 4 1 3 2 (B) 2 4 1 3

(C) 3 1 2 4 (D) 3 1 4 2

Match the following :

(a) Justice Party – 1. 1949

(b) D.M.K. – 2. 1944

(c) Dravida Kazhagam – 3. 1916

(d) Self Respect Movement – 4. 1925

(A) 4 1 3 2 (B) 2 4 1 3

(C) 3 1 2 4 (D) 3 1 4 2

விடை: (C) 3 1 2 4 – நீதிக்கட்சி (தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்) 1916; சுயமரியாதை இயக்கம் 1925; திராவிடர் கழகம் 1944 (சேலம் மாநாடு); தி.மு.க. 1949 (அண்ணா).

Justice Party (SILF) 1916; Self-Respect Movement 1925; Dravidar Kazhagam 1944 (Salem conference); DMK 1949 (C.N. Annadurai).

வினா 31 · அலகு I

சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநில அளவிலான கூட்டம் எந்த இடத்தில் நடத்தப்பட்டது?

(A) செங்கல்பட்டு (B) மதுரை

(C) சென்னை (D) கோவை

The first state level meet of self respect movement was conducted at which place?

(A) Chengalpet (B) Madurai

(C) Chennai (D) Kovai

விடை: (A) செங்கல்பட்டு – முதல் மாகாண சுயமரியாதை மாநாடு பிப்ரவரி 1929-இல் செங்கல்பட்டில் நடைபெற்றது (தலைமை: டபிள்யூ.பி.ஏ. சௌந்தரபாண்டியன்).

The First Provincial Self-Respect Conference was held at Chengalpattu in February 1929 (presided by W.P.A. Soundarapandian).

வினா 32 · அலகு I

சென்னை மாகாணத்தின் ஆளுநர் எட்வர்ட் கிளைவ் குறித்த சொற்றொடர்களில் எது/எவை தவறானது?

(A) ஆற்காடு நவாபின் அரசைப் பறித்துக் கொண்டார் (B) பாளையக்கார ஆட்சி முறையை ஒழித்தார்

(C) சென்னையில் தலைமை நீதிமன்றம் இவருடைய ஆட்சிக்காலத்தில் நிறுவப்பட்டது (D) கலெக்டர் ஜாக்சன், தன்னை அவமானப்படுத்திவிட்டதாக வீரபாண்டிய கட்டபொம்மன் எழுதிய கடிதத்திற்கு எட்வர்ட் கிளைவ் ஆர்வம் காட்டவில்லை

Which one of the following statements is/are wrong regarding Edward Clive, the Governor of Madras Presidency?

(A) He usurped the regime of Nawab of Arcot (B) He abolished the poligar system

(C) During his tenure, the supreme court of judicature in madras was founded (D) He did not show interest in the letter of Veera Pandya Kattabomman stating the insult inflicted on him by Collector Jackson

விடை: (D) கலெக்டர் ஜாக்சன், தன்னை அவமானப்படுத்திவிட்டதாக வீரபாண்டிய கட்டபொம்மன் எழுதிய கடிதத்திற்கு எட்வர்ட் கிளைவ் ஆர்வம் காட்டவில்லை – எட்வர்ட் கிளைவ் (1798–1803) கர்நாடக அரசைக் கைப்பற்றினார் (1801), பாளையக்கார முறையை ஒழித்தார்; சென்னை உச்ச நீதிமன்றம் 1801-இல் நிறுவப்பட்டது. கட்டபொம்மனின் புகாருக்கு விசாரணைக் குழு அமைத்து ஜாக்சனைப் பதவி நீக்கினார் – ஆகவே (D) தவறு.

Edward Clive (1798–1803) took over the Carnatic (1801), ended the poligar system and saw the Supreme Court of Madras set up (1801). He did act on Kattabomman's complaint – an inquiry was ordered and Collector Jackson was removed – so D is wrong.

வினா 33 · அலகு I

சரியான பொருத்தத்தை கண்டுபிடி.

(1) பங்கிம் சந்திர சாட்டர்ஜி – ஆனந்த மடம்

(2) மிண்டோ பிரபு – சென்னை

(3) சுதேசி – வ.உ.சி

(4) லாலா லஜபதி ராய் – கல்விக்கான தேசிய கழகம்

(A) (1) மற்றும் (3) சரி
(B) (1) மற்றும் (2) சரி
(C) (1) மற்றும் (4) சரி
(D) (4) மற்றும் (3) சரி

Choose the right matches.

(1) Bankim Chandra Chatterjee – Anandmath

(2) Lord Minto – Madras

(3) Swadeshi – VOC

(4) Lala Lajpat Rai – The National Council of Education

(A) (1) and (3) correct
(B) (1) and (2) correct
(C) (1) and (4) correct
(D) (4) and (3) correct

விடை: (A) (1) மற்றும் (3) சரி – பங்கிம் சந்திரர் – ஆனந்த மடம்; வ.உ.சி. – சுதேசி கப்பல் நிறுவனம் (1906). மிண்டோ இந்திய வைஸ்ராய் (சென்னை அல்ல); தேசியக் கல்விக் கழகம் (1906) வங்காளத்தில் சதீஷ் முகர்ஜி, அரவிந்தர் முதலியோரால் – லஜபதி ராய் அல்ல.

Bankim Chandra wrote Anandamath; V.O.C. founded the Swadeshi Steam Navigation Company (1906). Minto was Viceroy (not of Madras), and the National Council of Education (1906) was formed in Bengal (Satish Mukherjee, Aurobindo), not by Lajpat Rai.

வினா 34 · அலகு I

பின்வருவனவற்றைப் பொருத்துக :

(a) மெட்ராஸ் மருத்துவப் பள்ளி – 1. 1837

(b) மெட்ராஸ் பிரசிடென்சி கல்லூரி – 2. 1835

(c) மெட்ராஸ் கிறிஸ்துவக் கல்லூரி – 3. 1842

(d) பச்சையப்பாஸ் கல்லூரி – 4. 1840

(A) 2 1 4 3
(B) 2 4 1 3
(C) 2 4 3 1
(D) 4 3 2 1

Match the following :

(a) Madras Medical School – 1. 1837

(b) Madras Presidency College – 2. 1835

(c) Madras Christian College – 3. 1842

(d) Pachayappas College – 4. 1840

(A) 2 1 4 3
(B) 2 4 1 3
(C) 2 4 3 1
(D) 4 3 2 1

விடை: (B) 2 4 1 3 – மெட்ராஸ் மருத்துவப் பள்ளி 1835; பிரசிடென்சி கல்லூரி 1840-இல் ஆயத்தப் பள்ளியாகத் தொடங்கியது; கிறிஸ்துவக் கல்லூரி 1837-இல் ஆண்டர்சன் பள்ளியாக; பச்சையப்பா கல்வி நிலையம் 1842.

Madras Medical School 1835; Presidency College began as the Madras Preparatory School in 1840; MCC began as Anderson's General Assembly School in 1837; Pachaiyappa's institution opened in 1842.

வினா 35 · அலகு I

கீழ்கண்டவர்களில் முத்துராமலிங்க சேதுபதிக்கு பதிலாக கிழக்கு இந்திய கம்பெனியால் ராம்நாட்டின் ஜமீன்தாராக நியமிக்கப்பட்டவர் யார்?

(A) மங்கலேஸ்வரி நாச்சியார்
(B) மருது பாண்டியர்
(C) ராஜ உடையப்ப சேதுபதி
(D) இரண்டாம் ரகுநாத சேதுபதி

Who among the following was appointed as the Zamindar of Ramnad by East India Company in the place of Muthu Ramalinga Sethupathi?

(A) Mangaleswari Nachiyar
(B) Maruthu Pandiyar
(C) Raja Udaiyappa Sethupathi
(D) Raghunatha Sethupathi II

விடை: (A) மங்கலேஸ்வரி நாச்சியார் – முத்துராமலிங்க சேதுபதியை 1795-இல் பதவி நீக்கிய கம்பெனி, அவரது சகோதரி மங்களேஸ்வரி நாச்சியாரை 1803-இல் ராம்நாடு ஜமீன்தாராக நியமித்தது.

After deposing Muthuramalinga Sethupathi (1795), the Company made his sister Mangaleswari Nachiyar the Zamindar of Ramnad (1803) under the permanent settlement.

வினா 36 · அலகு I

பின்வரும் கூற்றையும், காரணத்தையும் படித்துக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டிலிருந்து சரியான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.
உறுதியான கூற்று [A] : கர்நாடகாவின் நவாப் அன்வர் உத்தின் பிரெஞ்சுக்காரர்களை எதிர்த்துப் போரிட 1746ல் ஒரு படையை அனுப்பினார்.
காரணம் [R] : மெட்ராஸ் கைப்பற்றப்பட்ட பிறகு அதை நவாப்பிடம் ஒப்படைப்பேன் என்ற வாக்குறுதியைப் பிரெஞ்சு கவர்னர் நிறைவேற்றத் தவறிவிட்டார்.
குறியீடு :

(A) [A] சரி ஆனால் [R] தவறு
(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R] என்பது [A]ன் சரியான விளக்கம்
(C) [A] தவறு ஆனால் [R] சரி
(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A]ன் சரியான விளக்கம் அல்ல

Read the following Assertion and Reason and choose the correct answer from the code given below.
Assertion [A] : Anwar–ud–Din, the Nawab of Carnatic sent an army to fight against the French in 1746.
Reason [R] : Dupleix, the French Governor, failed to keep the promise of surrendering Madras to Nawab after its recapture.
Code :
(A) [A] is true but [R] is false
(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]
(C) [A] is false but [R] is true
(D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A]

விடை: (B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R] என்பது [A]ன் சரியான விளக்கம் – முதல் கர்நாடகப் போரில் பிரெஞ்சுக்காரர் மெட்ராஸைக் கைப்பற்றினர் (1746); அதை நவாபிடம் ஒப்படைப்பதாகக் கூறிய டியூப்ளே மறுத்ததால் அன்வர்-உத்-தீன் படை அனுப்பினார்; அடையாறு (சாந்தோம்) போரில் தோற்றது.
In the First Carnatic War the French captured Madras (1746); Dupleix had promised to hand it to the Nawab but did not, so Anwar-ud-din sent an army, which the French defeated at Adyar (St Thome).

வினா 37 · அலகு II

அரசியலமைப்புத் திருத்தங்களை அவற்றின் தொடர்புடைய திருத்தச் சட்டங்களுடன் சரியாகப் பொருத்துங்கள்.
திருத்தம் – பொருளடக்கம்
(a) 91ஆவது திருத்தச் சட்டம் – 1. அமைச்சர்கள் குழுவில் பிரதமர் உட்பட மக்களவை உறுப்பினர்களில் 15 விழுக்காடுக்கு மேல் இருக்கக்கூடாது
(b) 102ஆவது திருத்தச் சட்டம் – 2. மக்களவையில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடங்கள் வழங்கப்படும்
(c) 105ஆவது திருத்தச் சட்டம் – 3. இது பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையத்திற்கு அரசியலமைப்புத் தகுநிலையை வழங்குகிறது
(d) 106ஆவது திருத்தச் சட்டம் – 4. சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினரைக் கண்டறிந்து குறிப்பிடும் அதிகாரம் மாநில அரசுக்கு மீண்டும் வழங்கப்பட்டுள்ளது

(A) 1 4 2 3
(B) 2 1 3 4
(C) 4 1 3 2
(D) 1 3 4 2

Match the constitutional amendments to their corresponding acts correctly.
Amendment – Subject matter
(a) 91st Amendment Act – 1. The council of Ministers must contain no more than 15% of the Lok Sabha members, including the Prime Minister
(b) 102nd Amendment Act – 2. Women are given one-third of all seats in the Lok Sabha
(c) 105th Amendment Act – 3. It grants constitutional status to the National Commission for Backward classes
(d) 106th Amendment Act – 4. The state government is empowered again to identify and specify socially and economically backward classes
(A) 1 4 2 3
(B) 2 1 3 4
(C) 4 1 3 2
(D) 1 3 4 2

விடை: (D) 1 3 4 2 – 91-வது (2003) – அமைச்சரவை 15% வரம்பு; 102-வது (2018) – NCBC-க்கு அரசியலமைப்புத் தகுநிலை (338B); 105-வது (2021) – SEBC பட்டியலிடும் அதிகாரம் மாநிலங்களுக்கு மீண்டும்; 106-வது (2023) – பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடு.
91st (2003) – ministry size capped at 15%; 102nd (2018) – constitutional status to NCBC (Art. 338B); 105th (2021) – restored states' power to list SEBCs; 106th (2023) – one-third seats for women in Lok Sabha/Assemblies.

வினா 38 · அலகு II

உலகத் தமிழ் புலம்பெயர் நாள் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது உண்மை?

(i) தமிழக முதலமைச்சர் அவர்கள் ஜனவரி 12-ஐ உலக புலம்பெயர் தமிழர் தினமாக அறிவித்தார்.

(ii) 'நாம் வெல்வோம்' என்ற கருப்பொருளுடன் புலம்பெயர் தமிழர்கள் மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

(iii) வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ் கற்பிக்க தமிழ்ப் பரப்புரை கழகம் அமைப்பதற்கு ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(A) (i) மட்டும்
(B) (i) மற்றும் (iii) மட்டும்
(C) (i) மற்றும் (ii) மட்டும்
(D) (ii) மற்றும் (iii) மட்டும்

Which of the following statements is true about World Tamil Diaspora Day?

(i) The Chief Minister of Tamil Nadu declared January 12 as World Tamil Diaspora Day

(ii) The Diaspora Tamils conference was successfully held, with the theme of 'we will win'

(iii) Rs. 5 crore has been sanctioned for the establishment of Tamil Parapurai Kazhagam to teach Tamil to Tamils living in foreign countries.

(A) (i) only
(B) (i) and (iii) only
(C) (i) and (ii) only
(D) (ii) and (iii) only

விடை: (A) (i) மட்டும் – ஜனவரி 12-ஐ அயலகத் தமிழர் தினமாகத் தமிழக முதலமைச்சர் அறிவித்தார் (i) சரி. 2024 மாநாட்டின் கருப்பொருள் 'தமிழ் வெல்லும்'; 'நாம் வெல்வோம்' அல்ல (ii). (iii)-இல் உள்ள ரூ.5 கோடி உறுதிப்படுத்தப்படவில்லை.

The TN Chief Minister declared 12 January as World Tamil Diaspora Day (i). The 2024 meet's theme was 'Tamil Vellum' (Tamil will win), not 'we will win' (ii); the Rs 5 crore claim in (iii) is not supported.

வினா 39 · அலகு IV

கீழ்க்கொடுக்கப்பட்டவற்றுள் பொருத்தமான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) மஞ்சுஷா கன்வர் – இறகுப் பந்தாட்டம்

(2) வினீத்குமார் ஷர்மா – சதுரங்கம்

(3) கவிதா செல்வராஜ் – கபடி

(4) R. வைஷாலி – ஹாக்கி

(A) (2) மற்றும் (4) சரி
(B) (1) மற்றும் (3) சரி
(C) (3) மற்றும் (4) சரி
(D) (1) மற்றும் (2) சரி

Which of the following is correctly paired?

(1) Manjusha Kanwar – Badminton

(2) Vineet Kumar Sharma – Chess

(3) Kavitha Selvaraj – Kabaddi

(4) R. Vaishali – Hockey

(A) (2) and (4) are correct
(B) (1) and (3) are correct
(C) (3) and (4) are correct
(D) (1) and (2) are correct

விடை: (B) (1) மற்றும் (3) சரி – தேசிய விளையாட்டு விருதுகள் 2023 – தயான் சந்த் வாழ்நாள் விருது: மஞ்சுஷா கன்வர் (இறகுப் பந்து), வினீத் குமார் ஷர்மா (ஹாக்கி), கவிதா செல்வராஜ் (கபடி). ஆர். வைஷாலி – சதுரங்கம் (அர்ஜுனா 2023).

National Sports Awards 2023 – Dhyan Chand Award (lifetime): Manjusha Kanwar (badminton), Vineet Kumar Sharma (hockey), Kavitha Selvaraj (kabaddi). R. Vaishali (Arjuna 2023) is a chess Grandmaster.

வினா 40 · அலகு IV

பொருத்துக :

திட்டங்கள் – பயனாளிகள்

(a) நான் முதல்வன் – 1. பொதுமக்கள் குறைகள் இல்லாமல் தீர்க்கப்படுவது

(b) புதுமைப் பெண் – 2. பெண்களுக்கு அதிகாரமளித்தல்

(c) விடியல் பயணம் – 3. மாணவிகளுக்கு கல்வி உதவியளித்தல்

(d) மக்களுடன் முதல்வர் – 4. திறன் மேம்பாடு

(A) 3 4 1 2
(B) 4 3 2 1
(C) 1 2 3 4
(D) 4 1 2 3

Match the following :

Schemes – Beneficiaries

(a) Naan Mudalvan – 1. Public Grievances gets resolved

(b) Pudumai pen – 2. Women Empowerment

(c) Vidiyal Payanam – 3. Education Assistance for Girl Students

(d) Makkaludan Mudhalvar – 4. Skill Development

(A) 3 4 1 2
(B) 4 3 2 1
(C) 1 2 3 4
(D) 4 1 2 3

விடை: (B) 4 3 2 1 – நான் முதல்வன் – திறன் மேம்பாடு; புதுமைப் பெண் – உயர்கல்வி மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000; விடியல் பயணம் – பெண்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்து; மக்களுடன் முதல்வர் – குறைதீர் முகாம்கள்.

Naan Mudhalvan – skill development of students; Pudhumai Penn – Rs 1,000/month for girl students in higher education; Vidiyal Payanam – free bus travel for women; Makkaludan Mudhalvar – camps to resolve public grievances.

வினா 41 · அலகு II

மாவட்ட ஆட்சியரின் பணிகள் தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுக்களில் சரியானவை எவை?

(i) அவர் குடிமைப் பாதுகாப்புத் தொடர்பான பணிகளை மேற்கொள்கிறார்.

(ii) அவர் தன் மாவட்டத்தில் உள்ள நகர்ப்புற நிர்வாகத்தை மேற்பார்வையிடுகிறார்

(iii) அவர் மாவட்ட திட்ட செயலாக்கக் குழுவினைத் தலைமையேற்று வழிநடத்துகிறார்

(A) (i) மற்றும் (ii) மட்டும்
(B) (ii) மட்டும்
(C) (ii) மற்றும் (iii) மட்டும்
(D) (i), (ii) மற்றும் (iii)

Find out the correct statements about the functions of District Collector.

(i) He handles work pertaining to civil defence

(ii) He supervises the Municipal Administration in the District

(iii) He presides over the District plan Implementation Committee

(A) (i) and (ii) only
(B) (ii) only
(C) (ii) and (iii) only
(D) (i), (ii) and (iii)

விடை: (D) (i), (ii) மற்றும் (iii) – மாவட்ட நிர்வாகத் தலைவரான ஆட்சியர் குடிமைப் பாதுகாப்புப் பணிகள், நகராட்சி நிர்வாக மேற்பார்வை, மாவட்டத் திட்டச் செயலாக்கக் குழுத் தலைமை – மூன்றும் சரி.

As head of district administration the Collector handles civil defence, supervises municipal (urban local body) administration and chairs the district plan implementation committee – all three are correct.

வினா 42 · அலகு IV

தனித்து வேறுபடும் ஒன்றைத் தெரிவு செய்க.

தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகத்தின் (சிப்காட்) நன்மைகள் குறித்து கீழே உள்ள அறிக்கைகளைக் கவனியுங்கள்.

(A) இது நன்கு வடிவமைக்கப்பட்ட தொழில்துறை பூங்காக்களை உருவாக்கி பராமரிக்கிறது
(B) தொழில் நிறுவனங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு இது உதவுகிறது
(C) இது முதலீட்டாளர்களுக்கு ஒற்றைத் தொடர்புப் புள்ளியாகச் செயல்படுகிறது
(D) இது பல்வேறு கடன்களையும், இலவச மின்சாரத்தையும் வழங்குகிறது

Select the "odd one" out.

Consider the statements below regarding the advantages of State Industries Promotion Corporation of Tamil Nadu (SIPCOT) Limited.

(A) It creates and maintains well-designed industrial parks
(B) It facilitates the acquisition of land for industrial purposes for business
(C) It serves as a single point contact for investors
(D) It provides a range of loans and free electricity

விடை: (D) இது பல்வேறு கடன்களையும், இலவச மின்சாரத்தையும் வழங்குகிறது – சிப்காட் தொழில் பூங்காக்களை உருவாக்கிப் பராமரிக்கிறது, தொழிலுக்கான நிலத்தைக் கையகப்படுத்துகிறது, முதலீட்டாளர்களுக்கு ஒற்றைத் தொடர்புப் புள்ளி; இலவச மின்சாரம் வழங்குவதில்லை.

SIPCOT develops and maintains industrial parks, acquires land for industry and acts as a single point of contact for investors; it does not give free electricity.

வினா 43 · அலகு II

கூற்று [A] : அம்பேத்கரின் அனைத்துப் படைப்புகளையும் மொழிபெயர்க்க ரூ. 5 கோடி வழங்க தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

காரணம் [R] : தகவல் தொழில் நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை மூலம் அம்பேத்கரின் படைப்புகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட உள்ளது.

(A) கூற்று [A] சரி, ஆனால் காரணம் [R] தவறு
(B) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி; மற்றும் காரணம் [R], [A] கூற்றுக்கு சரியான விளக்கம்
(C) கூற்று [A] தவறு, காரணம் [R] சரி
(D) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி, ஆனால் காரணம் [R], [A] கூற்றுக்கு சரியான விளக்கமல்ல என்பது சரியானது

Assertion [A] : The Chief Minister of Tamil Nadu has ordered Rs. 5 Crore to translate all works of Dr.B.R. Ambedkar.

Reason [R] : The translation works of Dr.B.R. Ambedkar into Tamil will be carried out by the Information Technology and Digital Service Department.

(A) [A] is true but [R] is false
(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]
(C) [A] is false, [R] is true
(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] is correct

விடை: (A) கூற்று [A] சரி, ஆனால் காரணம் [R] தவறு – அம்பேத்கர் படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்க்க ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டது (2022). ஆனால் அப்பணி தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையிடம் இல்லை; எனவே [R] தவறு.

The CM ordered Rs 5 crore for translating Ambedkar's works into Tamil (2022), but the work is not given to the IT & Digital Services Department, so [R] is false.

வினா 44 · அலகு II

ஒரு வரியை நீக்கவோ அல்லது நிறுத்திவைக்கவோ நகராட்சிக்கு அதிகாரம் வழங்கும் சட்டப்பிரிவானது

(A) பிரிவு – 110
(B) பிரிவு – 111
(C) பிரிவு – 112
(D) பிரிவு – 113

The power of the municipality to suspend (or) abolish tax is conferred by

(A) Section – 110
(B) Section – 111
(C) Section – 112
(D) Section – 113

விடை: (C) பிரிவு – 112 – 'வரியை நிறுத்திவைக்க அல்லது நீக்க நகராட்சிக்கு உள்ள அதிகாரம்' என்பது பிரிவு 112 (ராஜஸ்தான் நகராட்சிகள் சட்டம், 2009).

Section 112 is headed 'Power of Municipality to suspend or abolish tax' (Rajasthan Municipalities Act, 2009, the Act whose numbering fits the options).

தகவல் ஆதாரம் முழுமையாகக் கிடைக்கவில்லை – TNPSC இறுதி விடைக்குறிப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

வினா 45 · அலகு II

கூற்று [A] : ஒரு செயலாளர் கோப்புகளில் ஆழ்ந்து மற்றும் அது வழக்கமான சுமையாகவும் இருக்க வேண்டும்.

காரணம் [R] : அரசாங்கத்தின் ஒட்டுமொத்த காட்சிகளையும், எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் அளவிடுவதற்கு அவருக்கு காலம் இருப்பது அவசியம்

(A) [A] சரி ஆனால் [R] தவறு
(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி; மற்றும் [A] க்கு [R] சரியான விளக்கமாகும்
(C) [A] தவறு, [R] சரி
(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [A] க்கு [R] சரியான விளக்கமல்ல என்பது சரி

Assertion [A] : A secretary should be immersed in files and burdened with routine

Reason [R] : It is essential that he should have time to grasp the overall picture, size up the problems facing the Government

(A) [A] is true but [R] is false
(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]
(C) [A] is false, [R] is true
(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] is correct

விடை: (C) [A] தவறு, [R] சரி – செயலாளர் கொள்கை ஆலோசகர்; அவர் கோப்புகளிலும் வழக்கமான பணிகளிலும் மூழ்கக் கூடாது; அரசின் ஒட்டுமொத்தப் பிரச்சினைகளை மதிப்பிட நேரம் வேண்டும். எனவே [A] தவறு, [R] சரி.

A Secretary is a policy adviser and should NOT be buried in files and routine; he must have time to see the overall picture and size up the Government's problems. So [A] is false, [R] is true.

வினா 46 · அலகு II

பின்வரும் குழுக்களை காலவரிசைப்படி வரிசைப்படுத்துக.

(1) G.V.K. ராவ் குழு
(2) அசோக் மேத்தா குழு
(3) பல்வந்த்ராய் மேத்தா குழு
(4) L.M. சிங்வி குழு

(A) (2), (3), (1), (4)
(B) (3), (2), (1), (4)
(C) (4), (3), (1), (2)
(D) (1), (4), (2), (3)

Arrange the following committees in chronological order.

(1) G.V.K. Rao committee
(2) Ashok mehta committee
(3) Balwantrai Mehta committee
(4) L.M. Singhvi committee

(A) (2), (3), (1), (4)
(B) (3), (2), (1), (4)
(C) (4), (3), (1), (2)
(D) (1), (4), (2), (3)

விடை: (B) (3), (2), (1), (4) – பல்வந்த்ராய் மேத்தா 1957 → அசோக் மேத்தா 1977 → G.V.K. ராவ் 1985 → L.M. சிங்வி 1986 (பஞ்சாயத்து ராஜ் குழுக்கள்).

Balwantrai Mehta 1957 → Ashok Mehta 1977 → G.V.K. Rao 1985 → L.M. Singhvi 1986 (committees on Panchayati Raj).

வினா 47 · அலகு II

சரியான விடையைத் தேர்வு செய்க

பின்வரும் வாக்கியங்களில் மாநில அமைச்சர்கள் பற்றிய சரியான கூறுகளைத் தேர்வு செய்.

(i) மாநில அமைச்சர்கள் மாநிலச் சட்ட மன்றத்திற்குக் கூட்டாகப் பொறுப்புடையவர்கள்

(ii) மாநில அமைச்சர்களுக்கு ஆளுநர் அவர்கள் இரகசிய காப்பு மற்றும் பதவிப் பிரமாணம் செய்து வைப்பார்

(iii) மாநில அமைச்சர்களின் செலவினங்கள் சலுகைகள் மற்றும் பிற படிகளை மத்திய பாராளுமன்றமே தீர்மானிக்கும்

(A) (i) மட்டும் சரி
(B) (i) மற்றும் (ii) சரி
(C) (ii) மற்றும் (iii) சரி
(D) (i) மற்றும் (iii) சரி

Choose the correct answer :
Which of the following statements are true about the Council of Minister's in State?
(i) The Council of Ministers shall be collectively responsible to the State Legislative Assembly
(ii) The Governor shall administer the oath of office and secrecy to a Minister
(iii) The salaries and allowances of State Ministers shall be determined by the Union Legislature
(A) (i) only correct
(B) (i) and (ii) only correct
(C) (ii) and (iii) only correct
(D) (i) and (iii) only correct

விடை: (B) (i) மற்றும் (ii) சரி – சரத்து 164(2): சட்டமன்றத்திற்குக் கூட்டுப் பொறுப்பு; 164(3): ஆளுநர் பதவி, இரகசியக் காப்புப் பிரமாணம்; 164(5): அமைச்சர் ஊதியத்தை மாநிலச் சட்டமன்றம் நிர்ணயிக்கும் – நாடாளுமன்றம் அல்ல.
Art. 164(2): collective responsibility to the Legislative Assembly; Art. 164(3): Governor administers oaths; Art. 164(5): salaries of State Ministers are fixed by the State Legislature, not Parliament.

வினா 48 · அலகு II

மக்களவையின் அமைப்பு பற்றிய பின்வரும் அறிக்கைகளை படித்து சரியான விளக்கத்தை தேர்ந்தெடுக்கவும்.

(A) இது ஒன்றிய ஆட்சிப் பகுதிகளில் இருந்து 20 பிரதிநிதிகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்
(B) இது பிரதமரால் நியமிக்கப்படும் ஆங்கிலோ-இந்தியன் சமூகத்தின் 2 உறுப்பினர்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்
(C) இது மாநிலங்களில் இருந்து 552 பிரதிநிதிகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்
(D) இலக்கியம், அறிவியல், கலை மற்றும் சமூக அறிவியலில் சிறப்பு புலமை பெற்ற 12 நபர்களை குடியரசுத்தலைவர் பரிந்துரைப்பார்

Consider the following statements about the composition of the House of the people.
(A) It shall be composed of not more than 20 representatives from the Union Territories
(B) It shall be composed of not more than 2 members of the Anglo-Indian community, nominated by the Prime Minister
(C) It shall be composed of not more than 552 representatives of the state
(D) The President shall nominate 12 people having special knowledge in Literature, Science, Art and Social Science.

விடை: (A) இது ஒன்றிய ஆட்சிப் பகுதிகளில் இருந்து 20 பிரதிநிதிகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும் – சரத்து 81: மக்களவையில் மாநிலங்களிலிருந்து 530-க்கு மிகாமல், ஒன்றியப் பகுதிகளிலிருந்து 20-க்கு மிகாமல். ஆங்கிலோ-இந்தியன் நியமனம் (குடியரசுத் தலைவர்) 2020-இல் நீக்கப்பட்டது; 552 மொத்த உச்சவரம்பு; 12 நியமனம் – மாநிலங்களவை.
Art. 81: Lok Sabha has not more than 530 members from States and not more than 20 from UTs. Anglo-Indian nomination (by the President, not PM) ended in 2020 (104th Amendment); 552 is the overall maximum; 12 nominations is for the Rajya Sabha.

வினா 49 · அலகு II

கீழ்கொடுக்கப்பட்டுள்ள பட்டியல் I மற்றும் II-ல் உள்ளவற்றை சரியாக பொருத்துக.

பட்டியல் I (நீதிப்பேராணை) – பட்டியல் II (நேரடி பொருள்)

(a) ஆட்கொணர்வு நீதி பேராணை – 1. எத்தகைய தகுதி உரிமை

(b) செயலுறுத்தும் நீதி பேராணை – 2. சான்றளிப்பு

(c) நெறிமுறை உறுத்தும் நீதி பேராணை – 3. ஆணையிடுதல்

(d) தகுதி முறை வினவும் நீதி பேராணை – 4. ஓர் நபரை ஆஜர்படுத்துதல்

(A) 4 3 2 1
(B) 2 4 1 3
(C) 3 4 1 2
(D) 1 4 3 2

Match List-I with List-II and select the correct answer by using the codes given below the list.
List – I (Writs) – List – II (Literal Meaning)
(a) Habeas Corpus – 1. By what authority
(b) Mandamus – 2. To be certified
(c) Certiorari – 3. We command
(d) Quo Warranto – 4. To have the body of
(A) 4 3 2 1
(B) 2 4 1 3
(C) 3 4 1 2
(D) 1 4 3 2

விடை: (A) 4 3 2 1 – ஆட்கொணர்வு – 'உடலைக் கொண்டு வா'; செயலுறுத்தும் (மாண்டமஸ்) – 'ஆணையிடுகிறேம்'; நெறிமுறை உறுத்தும் (செர்ஷியோரரி) – 'சான்றளிக்கப்பட'; தகுதி முறை வினவும் (கோ வாரண்டோ) – 'எந்த அதிகாரத்தால்'.
Habeas Corpus – 'to have the body of'; Mandamus – 'we command'; Certiorari – 'to be certified'; Quo Warranto – 'by what authority'.

வினா 50 · அலகு II

பின்வரும் கூற்றுகளில் சரியானவைகள் எவை?

(i) எந்த ஒரு யூனியன் பிரதேசத்திற்கான உயர்நீதிமன்றத்தை அமைப்பதற்கான அதிகாரத்தை பாராளுமன்றம் பெற்றுள்ளது.

(ii) அனைத்து யூனியன் பிரதேசங்களுக்கும், டெல்லிக்கும் தனியே உயர்நீதிமன்றம் இல்லை.

(iii) அருணாச்சல பிரதேசம் மற்றும் மிசோரம் 1987-ஆம் ஆண்டு முழு அளவில் மாநிலங்களாயின.

(A) (ii) மற்றும் (iii) மட்டும்
(B) (ii) மட்டும்
(C) (i) மற்றும் (ii) மட்டும்
(D) (i) மற்றும் (iii) மட்டும்

Which of the following statements are true?

(i) Parliament is empowered to constitute a High Court for any Union Territory.

(ii) Of all the Union Territories, Delhi does not have a separate High Court of its own.

(iii) Arunachal Pradesh and Mizoram became fullfledged states in 1987.

(A) (ii) and (iii) only
(B) (ii) only
(C) (i) and (ii) only
(D) (i) and (iii) only

விடை: (D) (i) மற்றும் (iii) மட்டும் – சரத்து 241 – ஒன்றியப் பகுதிக்கு உயர்நீதிமன்றம் அமைக்க நாடாளுமன்றத்திற்கு அதிகாரம்; அருணாச்சலப் பிரதேசம், மிசோரம் 20-02-1987 அன்று மாநிலங்களாயின. டெல்லிக்குத் தனி உயர்நீதிமன்றம் உண்டு (1966) – (ii) தவறு.

Art. 241 lets Parliament constitute a High Court for a UT; Arunachal Pradesh and Mizoram became States on 20 February 1987. Delhi is the UT that does have its own High Court (since 1966) – so (ii) is false.

வினா 51 · அலகு II

எந்த வழக்கில் உச்சநீதிமன்றம் "இந்திய அரசியலமைப்பின் முன்னுரை அரசியலமைப்பின் ஒருங்கிணைந்த பகுதி" என்று தீர்ப்பு வழங்கியது?

(A) சங்கரி பிரசாத் வழக்கு (1951)
(B) எல்.ஐ.சி. வழக்கு (1995)
(C) இந்திரா நேரு காந்தி வழக்கு (1975)
(D) மேனகா காந்தி வழக்கு (1978)

In which of the following cases did the supreme court hold that "The preamble is an integral part of the Indian Constitution"?

(A) Shankari Prasad case (1951)
(B) LIC of India case (1995)
(C) Indira Nehru Gandhi case (1975)
(D) Maneka Gandhi case (1978)

விடை: (B) எல்.ஐ.சி. வழக்கு (1995) – எல்.ஐ.சி. வழக்கில் (1995) முன்னுரை அரசியலமைப்பின் ஒருங்கிணைந்த பகுதி என உச்சநீதிமன்றம் மீண்டும் உறுதிப்படுத்தியது (கேசவானந்த பாரதி 1973-க்குப் பின்).

In LIC of India v. Consumer Education & Research Centre (1995) the Supreme Court reiterated that the Preamble is an integral part of the Constitution (after Kesavananda Bharati, 1973).

வினா 52 · அலகு III

பின்வரும் PCR–ன் நிகழ்வுகளைச் சரியான வரிசைப்படி அமைக்கவும்.

1. பதனப்படுத்தல்
2. விரிவடைதல்
3. இயல்பு இழத்தல்
4. ஜெல் தயாரித்தல்

(A) 3, 4, 2, 1
(B) 1, 2, 3, 4
(C) 2, 1, 3, 4
(D) 3, 1, 2, 4

Arrange the following events of PCR in the correct order of occurrence

1. Annealing
2. Extension
3. Denaturation
4. Gel making

(A) 3, 4, 2, 1
(B) 1, 2, 3, 4
(C) 2, 1, 3, 4
(D) 3, 1, 2, 4

விடை: (D) 3, 1, 2, 4 – PCR சுழற்சி: இயல்பு இழத்தல் (~94°C) → பதனப்படுத்தல் (ப்ரைமர் இணைதல்) → விரிவடைதல் (Taq பாலிமரேஸ்); பின்னர் ஜெல் மின்னூற்பகுப்பில் சோதிக்கப்படும்.

A PCR cycle runs denaturation (~94°C) → annealing of primers (~55°C) → extension by Taq polymerase (~72°C); the product is then checked by gel electrophoresis.

வினா 53 · அலகு III

My Scheme இயங்குதளம் ஏன் இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது?

(A) அரசு தயாரிப்புகளுக்கு ஆன்லைன் ஷாப்பிங் வழங்குதல்

(B) பயனர்கள் தங்களின் மக்கள்தொகை அடிப்படையில் தகுதியான அரசு திட்டங்களை கண்டறிய அனுமதிப்பது

(C) குடிமக்களுக்கு கல்வி வளங்களை இலவசமாக வழங்குதல்

(D) நாடு முழுவதும் உள்ள அரசாங்க வேலைகளுக்கு விண்ணப்பிக்கும் மக்களுக்கு உதவுதல்

Why was the My Scheme Platform introduced by the Government of India?

(A) To provide online shopping for government products

(B) To allow users to discover eligible government schemes based on their demography

(C) To give citizens free access to educational resources

(D) To help people apply for government jobs across the country

விடை: (B) பயனர்கள் தங்களின் மக்கள்தொகை அடிப்படையில் தகுதியான அரசு திட்டங்களை கண்டறிய அனுமதிப்பது – myScheme (MeitY) தளம் – குடிமகனின் விவரங்களின் அடிப்படையில் அவர் தகுதியுடைய அரசுத் திட்டங்களை ஒரே இடத்தில் தேடிக் கண்டறிய உதவுகிறது.

myScheme (MeitY/NeGD) is a national platform for one-stop search and discovery of government schemes for which a citizen is eligible, based on his/her profile.

வினா 54 · அலகு III

பொருத்துக :

(a) இணை தடுப்பூசி – 1. இளம்பிள்ளை வாதம்

(b) டாக்ஸாய்டு தடுப்பூசி – 2. ஹெபடைடிஸ்-B

(c) கொல்லப்பட்ட தடுப்பூசி – 3. தட்டம்மை

(d) அட்டென்யூட்டட் தடுப்பூசி – 4. டிப்தீரியா

(A) 3 2 4 1

(B) 2 4 1 3

(C) 4 3 2 1

(D) 1 3 4 2

Match the following :

(a) Conjugate vaccine – 1. Polio

(b) Toxoid vaccine – 2. Hepatitis-B

(c) Killed vaccine – 3. Measles

(d) Attenuated vaccine – 4. Diphtheria

(A) 3 2 4 1

(B) 2 4 1 3

(C) 4 3 2 1

(D) 1 3 4 2

விடை: (B) 2 4 1 3 – டிப்தீரியா – டாக்ஸாய்டு, சால்க் போலியோ (IPV) – கொல்லப்பட்ட தடுப்பூசி, தட்டம்மை – உயிருள்ள வலுவிழந்த தடுப்பூசி; இவற்றுக்குப் பொருந்துவது (B) மட்டுமே.

Diphtheria vaccine is a toxoid, inactivated (Salk) polio vaccine is a killed vaccine and measles vaccine is live attenuated; only option B fits, leaving Hepatitis-B for 'conjugate'.

வினா 55 · அலகு III

பின்வருவனவற்றுள் எந்தத் தாவரம், அதிக CO_2 உறிஞ்சும் திறனுடன், காலநிலை மாற்றத்தோடு போராடும் வகையில் மரபணு மாற்றம் செய்யப்பட்டது?

(A) அரிசி

(B) சோயா பீன்

(C) பைன் மரம்

(D) சோளம்

Which plant was recently genetically engineered to help combat climate change by absorbing more CO_2?

(A) Rice

(B) Soya bean

(C) Pine Tree

(D) Corn

விடை: ஒன்றுக்கு மேற்பட்ட விருப்பங்கள் சரியானவை: (A), (C) – இரண்டுக்கும் ஆதாரம் உண்டு: அதிக CO_2 உறிஞ்சும் மரபணு மாற்ற அரிசி (OSA1, 2021; EPSPS, 2023) மற்றும் அதிக கரியமில வாயுவைப் பிடிக்கும் Living Carbon நிறுவனத்தின் மரபணு மாற்ற பைன்/பாப்லர் மரங்கள்.

Both are documented: rice engineered to take up more CO2 (OSA1 rice, Nagoya/Nanjing 2021; EPSPS-overexpressing rice, Biology 2023), and Living Carbon's loblolly pine/poplar engineered to capture more CO2.

வினா 56 · அலகு III

திராட்சை செல் வளர்ப்பில் எது நிறைந்துள்ளது?

(A) அந்தோசாந்தின்

(B) அந்தோசயனின்

(C) பைரெத்ரின்

(D) டாக்சால்

Grape cell cultures are rich in

(A) Anthoxanthin

(B) Anthocyanin

(C) Pyrethrin

(D) Taxol

விடை: (B) அந்தோசயனின் – திராட்சை (Vitis vinifera) செல் வளர்ப்புகள் அந்தோசயனின் நிறமிகளை உற்பத்தி செய்வதற்கான முக்கிய அமைப்பாகும்.

Grape (Vitis vinifera) cell suspension cultures are a classic system for producing anthocyanin pigments.

வினா 57 · அலகு III

கூற்று [A] : அமிலமழை என்பது மழைநீர் அதிக அமிலத் தன்மையுடன் பொழிவது.

காரணம் [R] : எரிபொருட்களை எரிப்பதால் வளிமண்டலம் நைட்ரஜன் மற்றும் கந்தகத்தின் ஆக்ஸைடுகளை கொண்டுள்ளது.

(A) [A] சரி [R] தவறு

(B) [A] தவறு [R] சரி

(C) [A] மற்றும் [R] இரண்டுமே தவறு

(D) [A] மற்றும் [R] இரண்டுமே சரி [R] என்பது [A]க்கு சரியான விளக்கம்

Assertion [A] : Acid rain means the presence of acids in rain water.

Reason [R] : Atmosphere contains oxides of nitrogen and sulphur produced by combustion of fuels.

(A) [A] is true [R] is false

(B) [A] is false [R] is true

(C) Both [A] and [R] are false

(D) Both [A] and [R] are true and [R] is correct explanation of [A]

விடை: (D) [A] மற்றும் [R] இரண்டுமே சரி [R] என்பது [A]க்கு சரியான விளக்கம் – எரிபொருள் எரிப்பால் வெளியாகும் SO_2, NO_x மழைநீரில் கரைந்து கந்தக, நைட்ரிக் அமிலங்களாகி மழையை அமிலத் தன்மையாக்குகின்றன (pH 5.6-க்குக் கீழ்).

SO_2 and NO_x from burning fuels dissolve in rain water to form sulphuric and nitric acids, making the rain acidic (pH below 5.6).

வினா 58 · அலகு III

பின்வருவனவற்றில் எது தவறாக இணைக்கப்பட்டுள்ளது?

(i) சிலிகோன் ரப்பர் – உடல் திரவங்களுடன் வினைபுரியாது

(ii) பிளாஸ்டிசைசர் – நெகிழியை உடையச் செய்யும்

(iii) லேமினேட் – பிசின் மற்றும் ஒட்டிகளின் கலவை

(iv) நிரப்பி – இயந்திர பண்புகளை மேம்படுத்த

(A) (i) மற்றும் (iv) மட்டும்

(B) (ii) மட்டும்

(C) (i) மற்றும் (iii) மட்டும்

(D) (ii) மற்றும் (iv) மட்டும்

Which of the following is incorrectly paired?

(i) Silicone rubber – inert to body fluids

(ii) Plasticizer – make plastics brittle

(iii) Laminate – blend of adhesive and adherend

(iv) Filler – improve mechanical properties

(A) (i) and (iv) only

(B) (ii) only

(C) (i) and (iii) only

(D) (ii) and (iv) only

விடை: (B) (ii) மட்டும் – பிளாஸ்டிசைசர் நெகிழியை மென்மையாகவும் வளையும் தன்மையுடனும் ஆக்குகிறது (எ.கா. PVC-ல் தாலேட்டுகள்); உடையச் செய்வதில்லை. மற்ற மூன்றும் சரி.

A plasticizer is added to make plastics soft and flexible (e.g. phthalates in PVC), not brittle; the other three pairs are correct.

வினா 59 · அலகு III

2024, அக்டோபர் 4 முதல் 10 வரையிலான ஒரு வாரத்தில் எந்த கருத்துருவின் அடிப்படையில் "உலக விண்வெளி வாரம் 2024" கொண்டாடப்பட்டது?

(A) விண்வெளி மற்றும் காலநிலை மாற்றம்

(B) விண்வெளி மற்றும் ஆற்றல் நிலைத்தன்மை

(C) விண்வெளியில் மகளிர்

(D) நிலா : நட்சத்திரங்களின் வாயில்

What is the theme of "World Space Week 2024", celebrated from October 4th to 10th 2024?

(A) Space and climate change

(B) Space and energy sustainability

(C) Women in space

(D) The moon : Gateway to the stars

விடை: (A) விண்வெளி மற்றும் காலநிலை மாற்றம் – உலக விண்வெளி வாரம் 2024 (அக். 4–10) கருப்பொருள்: 'விண்வெளி மற்றும் காலநிலை மாற்றம்'.

The World Space Week Association set 'Space & Climate Change' as the theme for World Space Week 2024 (4–10 October).

வினா 60 · அலகு IV

பின்வருவனவற்றுள் எவை தவருகப் பொருத்தப்பட்டுள்ளன?

(1) 2016 – மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம்

(2) 1992 – தேசிய அறக்கட்டளை சட்டம்

(3) 2013 – தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம்

(4) 1999 – புனர்வாழ்வு மன்றச் சட்டம்

(A) (1) மற்றும் (3) தவருனவை
(B) (1) மற்றும் (4) தவருனவை
(C) (2) மற்றும் (3) தவருனவை
(D) (2) மற்றும் (4) தவருனவை

Which of the following are incorrectly paired?
(1) 2016 – The Rights of Persons with Disabilities Act
(2) 1992 – National Trust Act
(3) 2013 – National Food Security Act
(4) 1999 – Rehabilitation Council Act
(A) (1) and (3) are incorrect
(B) (1) and (4) are incorrect
(C) (2) and (3) are incorrect
(D) (2) and (4) are incorrect

விடை: (D) (2) மற்றும் (4) தவருனவை – தேசிய அறக்கட்டளை சட்டம் 1999-லும், இந்திய புனர்வாழ்வு மன்றச் சட்டம் 1992-லும் இயற்றப்பட்டன; (2), (4) ஆண்டுகள் இடம் மாறியுள்ளன. RPwD 2016, NFSA 2013 சரி.
The National Trust Act was passed in 1999 and the Rehabilitation Council of India Act in 1992 – the years in (2) and (4) are swapped; RPwD Act 2016 and NFSA 2013 are correct.

வினா 61 · அலகு II

POCSO சட்டம் 2012ன் கீழ், எந்த ஒரு நபரும் ஒரு குற்றத்தை காவல் துறையிடம் புகாரளிக்கத் தவறினால், பின்வருவனவற்றில் எதனால் தண்டிக்கப்படுவார்?

(A) 6 மாதங்கள் வரை சிறை தண்டனை
(B) 1 வருடம் சிறை தண்டனை மற்றும் அபராதம்
(C) 6 மாதங்கள் வரை சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும்
(D) 3 மாதங்கள் வரை சிறை தண்டனை

Under POCSO Act 2012, any person who fails to report an offence to the police shall be punishable with which of the following?
(A) imprisonment upto six months
(B) imprisonment upto one year and with fine
(C) imprisonment upto six months or fine or both
(D) imprisonment upto three months

விடை: (C) 6 மாதங்கள் வரை சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் – POCSO சட்டம் பிரிவு 21(1): குற்றத்தைப் புகாரளிக்கத் தவறினால் 6 மாதம் வரை சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும்.
Section 21(1) of the POCSO Act, 2012: failure to report or record an offence is punishable with imprisonment up to six months, or fine, or both.

வினா 62 · அலகு II

அட்டவணைப்படுத்தப்பட்ட சாதிகள் மற்றும் பழங்குடியினர் (அட்டூழியங்கள் தடுப்பு) சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?

(A) 1989
(B) 1987
(C) 1986
(D) 1985

In which year the Scheduled Castes and Scheduled Tribes (Prevention of Atrocities) Act was passed?
(A) 1989
(B) 1987
(C) 1986
(D) 1985

விடை: (A) 1989 – SC/ST (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 1989-ஆம் ஆண்டு சட்டம் எண் 33; 30.01.1990 முதல் நடைமுறைக்கு வந்தது.
The SC/ST (Prevention of Atrocities) Act is Act No. 33 of 1989 (in force from 30 January 1990).

வினா 63 · அலகு IV

கூற்று [A] : சமூக ஒடுக்குமுறையின் சங்கிலிகளை உடைப்பதில் நவீன கல்விமுறை முக்கிய பங்கு வகிக்கிறது.

காரணம் [R] : தாழ்த்தப்பட்ட மக்களிடையே காணப்படும் கல்வியின்மை அவர்களை தாழ்ந்த தொழில்களை மேற்கொள்ளச் செய்கிறது.

(A) [A] சரி ஆனால் [R] தவறு

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, [R] என்பது [A] இன் சரியான விளக்கம்

(C) [A] தவறு ஆனால் [R] சரி

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி ஆனால் [R] என்பது [A] இன் சரியான விளக்கம் அல்ல

Assertion [A] : Modern education played a crucial role in smashing the chains of social oppression.

Reason [R] : Lack of education among marginalized groups restricted them to do low occupations.

(A) [A] is true but [R] is false

(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

(C) [A] is false but [R] is true

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]

விடை: (B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, [R] என்பது [A] இன் சரியான விளக்கம் – கல்வி மறுக்கப்பட்டதால் ஒடுக்கப்பட்டோர் தாழ்ந்த பரம்பரைத் தொழில்களில் முடங்கினர்; நவீன கல்வி வேலைவாய்ப்பும் சமூக முன்னேற்றமும் தந்து ஒடுக்குமுறையை உடைத்தது – R, A-ஐ விளக்குகிறது.

Denial of education had confined marginalized groups to low-paid hereditary occupations; modern education opened jobs and mobility, so it helped break social oppression – R explains A.

வினா 64 · அலகு IV

கீழ்கண்டவற்றில் எது சரியாக பொருந்தியுள்ளது?

(1) PMSSY – Pradhan Mantri Swasthya Suraksha Yojana (Prime Minister Health Protection Programme)

(2) NTEP – National Tobacco Elimination Programme

(3) NVBDCP – National Vector Borne Disease Control Programme

(4) JSSK – Janani Shiksha Suraksha Karyakram (Mother Education Protection Programme)

(A) (2) மற்றும் (3) சரியானவை

(B) (3) மற்றும் (4) சரியானவை

(C) (1) மற்றும் (3) சரியானவை

(D) (1) மற்றும் (2) சரியானவை

Choose the right matches among types

(1) PMSSY – Pradhan Mantri Swasthya Suraksha Yojana (Prime Minister Health Protection Programme)

(2) NTEP – National Tobacco Elimination Programme

(3) NVBDCP – National Vector Borne Disease Control Programme

(4) JSSK – Janani Shiksha Suraksha Karyakram (Mother Education Protection Programme)

(A) (2) and (3) are correct

(B) (3) and (4) are correct

(C) (1) and (3) are correct

(D) (1) and (2) are correct

விடை: (C) (1) மற்றும் (3) சரியானவை – NTEP = தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம்; JSSK = ஜனனி சிசு சுரக்ஷா காரியக்ரம் (தாய்–சேய் இலவச சிகிச்சை); PMSSY, NVBDCP சரி.

NTEP is the National Tuberculosis Elimination Programme and JSSK is Janani Shishu Suraksha Karyakram (free care for mother and sick newborn); PMSSY and NVBDCP are correct.

வினா 65 · அலகு IV

'முதல்வரின் காலை உணவு திட்டம்' பற்றிய குறிப்புடன்; பின்வரும் அறிக்கையைக் கவனியுங்கள்.

(1) இந்த திட்டம் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது.

(2) மாநிலத்திலுள்ள அனைத்து தொடக்க பள்ளிகளிலும் இது செயல்படுத்தப்படும்.

(3) இந்த திட்டம் இந்தியாவில் ஒரு முன்னோடி திட்டம் மற்றும் மற்றவர்கள் பின்பற்றுவதற்கு முன்மாதிரியாகும்.

கீழே கொடுக்கப்பட்ட குறியீட்டை பயன்படுத்தி சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும் :

(A) (1) மற்றும் (2) மட்டும்

(B) (2) மற்றும் (3) மட்டும்

(C) (1) மற்றும் (3) மட்டும்

(D) (1), (2) மற்றும் (3)

With reference to 'Chief Minister's Breakfast Scheme'; consider the following statements.

(1) This scheme has been started by the Tamil Nadu

(2) It will be implemented in all Primary Schools in the State

(3) This scheme is a Pioneer Scheme in India and model for others to emulate

Select the correct answer using the code given below :

(A) (1) and (2) only

(B) (2) and (3) only

(C) (1) and (3) only

(D) (1), (2) and (3)

விடை: (C) (1) மற்றும் (3) மட்டும் – இத்திட்டம் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது (15-09-2022); பிற மாநிலங்கள் பின்பற்றும் முன்னோடித் திட்டம். ஆனால் இது அரசு (பின்னர் அரசு உதவி பெறும்) தொடக்கப் பள்ளிகளுக்கு மட்டுமே; 'அனைத்துத் தொடக்கப் பள்ளிகளுக்கும்' அல்ல. எனவே (2) தவறு.

TN launched the scheme (15-09-2022) and it is a pioneer scheme copied by other States. It covers government (and later aided) primary schools only, not 'all primary schools', so (2) is false.

வினா 66 · அலகு II

தமிழ்நாட்டில் முதல்வர் டாஷ்போர்டின் முதன்மைப் பங்கு என்ன?

(i) சுற்றுலாத் துறையின் புள்ளி விவரங்களைத் தருவது

(ii) அரசு துறைகளின் செயல்பாடுகளைக் கண்காணிப்பது

(iii) சுகாதாரச் சேவைகளை நிர்வகிப்பது

(A) (i) மட்டும் (B) (ii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும் (D) (ii) மற்றும் (iii) மட்டும்

What is/are the primary role/s of the Chief Minister Dashboard in Tamil Nadu?

(i) To provide tourism statistics

(ii) To monitor government department performance

(iii) To manage health care services

(A) (i) only (B) (ii) only

(C) (i) and (ii) only (D) (ii) and (iii) only

விடை: (B) (ii) மட்டும் – முதல்வர் டாஷ்போர்டு அரசுத் துறைகள், திட்டங்களின் முக்கியச் செயல்திறன் குறியீடுகளை நிகழ்நேரத்தில் கண்காணிக்கும் கருவி.

The CM Dashboard is a real-time monitoring tool that tracks key performance indicators of government departments and schemes; it does not itself run tourism statistics or health services.

வினா 67 · அலகு IV

கூற்று [A] : மாவட்டங்களிடையே மக்கள் தொகை மாற்றம் வேறுபடுகிறது.

காரணம் [R] : அதிக பொருளாதார வளர்ச்சி கொண்ட மாவட்டங்கள் அதிக மக்களை ஈர்க்கின்றன.

(A) [A] சரி [R] தவறு (B) [A] மற்றும் [R] சரி, ஆனால் [R] என்பது [A]வை விளக்கவில்லை

(C) [A] மற்றும் [R] இரண்டும் தவறு (D) [A] மற்றும் [R] சரி, மற்றும் [R] என்பது [A]வை சரியாக விளக்குகிறது

Assertion [A] : The Demographic transition varies between Districts.

Reason [R] : The districts of high economic growth attract larger population.

(A) [A] is true [R] is false (B) [A] and [R] are true but [R] is not the correct explanation for [A]

(C) Both [A] and [R] are false (D) Both [A] and [R] are true and [R] is correctly explaining [A]

விடை: (D) [A] மற்றும் [R] சரி, மற்றும் [R] என்பது [A]வை சரியாக விளக்குகிறது – பொருளாதார வளர்ச்சி மிகுந்த மாவட்டங்கள் (சென்னை, கோவை, திருப்பூர்) குடிபெயர்வோரை ஈர்ப்பதால் மாவட்டங்களிடையே மக்கள்தொகை மாற்றம் வேறுபடுகிறது.

Population change differs across districts because economically fast-growing districts (Chennai, Coimbatore, Tiruppur) attract migrants.

வினா 68 · அலகு IV

2022-23 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மை பட்ஜெட் திட்டங்களின் அம்சங்களில் பின்வருவனவற்றில் எது உண்மை?

(1) முதலமைச்சரின் தரிசு நில மேம்பாட்டு இயக்கம் நீர்ப்பாசனம் சார்ந்த பயிர்களை இலக்காகக் கொண்டது.

(2) ஒருங்கிணைந்த பண்ணை முறை பயிர் சாகுபடியுடன் கால்நடை வளர்ப்பையும் கொண்டது

(3) நெல் ஜெயராமன் இயக்கம் மூலமாக பாரம்பரிய நெல் விதைகளை பாதுகாத்தல்

(A) (1) மட்டும் (B) (1) மற்றும் (2) மட்டும்

(C) (2) மற்றும் (3) மட்டும் (D) (1) மற்றும் (3) மட்டும்

Which is/are the feature/s of Tamil Nadu Agriculture Budget schemes 2022-23 is true?

(1) The Chief Minister's dry land development mission targets irrigation dependent crops

(2) The integrated farming system promotes crop cultivation with livestock rearing

(3) Traditional paddy varieties are preserved under Nel Jayaram Mission

(A) (1) only (B) (1) and (2) only

(C) (2) and (3) only (D) (1) and (3) only

விடை: (C) (2) மற்றும் (3) மட்டும் – முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் மழைசார் நிலங்களுக்கானது – (1) தவறு; ஒருங்கிணைந்த பண்ணையம் பயிர் + கால்நடை; நெல் ஜெயராமன் இயக்கம் பாரம்பரிய நெல் ரகங்களைப் பாதுகாக்கிறது.

The CM's Dryland Development Mission is for rainfed (non-irrigated) lands, so (1) is wrong; integrated farming combines crops with livestock, and the Nel Jayaraman Mission conserves traditional paddy varieties.

வினா 69 · அலகு IV

தமிழ்நாட்டின் GSDP வளர்ச்சி விகிதம் நிலையான விகிதத்தில் 2022-23ல் 8.13% ஆகவும் 2023-24ல் _____% ஆகவும் இருந்தது.

(A) 8.18% (B) 8.23%

(C) 8.28% (D) 8.33%

Tamil Nadu's GSDP growth rates were 8.13% in 2022-23 and _____% in 2023-24 at constant prices.

(A) 8.18% (B) 8.23%

(C) 8.28% (D) 8.33%

விடை: (B) 8.23% – தமிழக அரசு செய்திக் குறிப்பு (21.10.2024): நிலையான விலையில் GSDP வளர்ச்சி 2022-23ல் 8.13%, 2023-24ல் 8.23%.

As per the TN Government press release (21-10-2024) based on MoSPI estimates, real GSDP grew 8.13% in 2022-23 and 8.23% in 2023-24.

வினா 70 · அலகு V

கீழ்வருவனவற்றில் சரியான இணை எது?

(1) SDMA – மாநிலப் பேரிடர் மேலாண்மைச் செயல்பாடு

(2) SFDRR – பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான செண்டாய் கட்டமைப்பு

(3) SDMP – மாநிலப் பேரிடர் மேலாண்மைத் திட்டம்

(4) NEOC – தேசிய அவசர நடவடிக்கைக் குழு

(A) (1) மற்றும் (2) சரி
(B) (2) மற்றும் (4) சரி
(C) (3) மற்றும் (4) சரி
(D) (1) மற்றும் (4) சரி

Which of the following is correctly paired?
(1) SDMA – State Disaster Management Action
(2) SFDRR – Sendai Framework for Disaster Risk Reduction
(3) SDMP – State Disaster Management Project
(4) NEOC – National Emergency Operation Committee
(A) (1) and (2) are correct
(B) (2) and (4) are correct
(C) (3) and (4) are correct
(D) (1) and (4) are correct

விடை: கொடுக்கப்பட்ட விருப்பங்களில் எதுவும் முழுமையாகச் சரியில்லை (அருகிலுள்ளது: (A)) – (2) மட்டுமே சரி: SDMA = மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையம், SDMP = மாநிலப் பேரிடர் மேலாண்மைத் திட்டம் (Plan), NEOC = தேசிய அவசரச் செயல்பாட்டு மையம். (2) மட்டும் என்ற விடை இல்லை.
Only (2) is right: SDMA = State Disaster Management Authority, SDMP = State Disaster Management Plan, NEOC = National Emergency Operations Centre. No option has (2) alone.

TNPSC இந்த வினாவை நிபுணர் குழுவின் இறுதி முடிவுக்கு அனுப்பியுள்ளது.

வினா 71 · அலகு V

2017 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் தமிழ்நாடு மற்றும் கேரளாவில் பேரழிவை ஏற்படுத்திய சூறாவளியின் பெயரைக் குறிப்பிடுக.

(A) வர்தா
(B) ஒக்கி
(C) நிஷா
(D) மருதா

Name one of the cyclones which wrecked havoc in Tamil Nadu and Kerala in the month of November to December 2017.
(A) Vardah
(B) Ockhi
(C) Nisha
(D) Maarutha

விடை: (B) ஒக்கி – ஒக்கி புயல் (29 நவ. – 6 டிச. 2017) கன்னியாகுமரி மாவட்டத்தையும் கேரளக் கடலோரத்தையும் பெரிதும் பாதித்தது; பல மீனவர்கள் உயிரிழந்தனர்.
Cyclone Ockhi (29 Nov – 6 Dec 2017) devastated Kanniyakumari district and coastal Kerala, causing heavy loss of fishermen's lives.

வினா 72 · அலகு V

பிரண்ட்லன்ட் அறிக்கையின் தலைப்பு

(A) பூமியை கவனித்துக் கொள்வது
(B) கவனித்துக் கொள்வது மற்றும் பகிர்வது
(C) நமது பொதுவான எதிர்காலம்
(D) சுற்றுச்சூழல் நட்பு சார்ந்த வளங்கள் நுகர்வு

The title of the Brundtland report is
(A) Caring for earth
(B) Caring and sharing
(C) Our common future
(D) Environment - friendly Resource Consumption

விடை: (C) நமது பொதுவான எதிர்காலம் – கிரோ ஹார்லம் பிரண்ட்லன்ட் தலைமையிலான உலக சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி ஆணையத்தின் 1987 அறிக்கை 'நமது பொதுவான எதிர்காலம்'; நிலையான வளர்ச்சியை வரையறுத்தது.
The 1987 report of the World Commission on Environment and Development (chaired by Gro Harlem Brundtland) is titled 'Our Common Future'; it defined sustainable development.

வினா 73 · அலகு V

நெடுவரிசை-I ஐ நெடுவரிசை-II உடன் பொருத்தி, விடைக் குறியீடுகளைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

(a) உயிர் பகுப்பாய்வு உயிரினங்கள் – 1. வெஸ்புலா ஜெர்மானிக்கா

(b) திரட்டி இனங்கள் – 2. பனை மரம்

(c) மைல்கல் இனங்கள் – 3. மரப்பேன்

(d) அயல்நாட்டு இனங்கள் – 4. ட்ரௌட் மீன்

(A) 2 4 1 3 (B) 3 1 4 2

(C) 4 3 2 1 (D) 3 2 4 1

Match Column-I with Column-II and select the correct answer using answer codes :

(a) Bioassay organism – 1. Vespula germanica

(b) Accumulator species – 2. Palm tree

(c) Keystone species – 3. Woodlice

(d) Exotic species – 4. Trout

(A) 2 4 1 3 (B) 3 1 4 2

(C) 4 3 2 1 (D) 3 2 4 1

விடை: (C) 4 3 2 1 – ட்ரௌட் மீன் – நச்சுச் சோதனை உயிரி; மரப்பேன் – கன உலோகங்களைத் திரட்டும்; பனை – மைல்கல் (கீஸ்டோன்) இனம்; வெஸ்புலா ஜெர்மானிக்கா (ஜெர்மன் குளவி) – அயல் ஆக்கிரமிப்பு இனம்.

Trout are standard bioassay (toxicity-test) fish, woodlice accumulate heavy metals, palms act as keystone food sources, and the German wasp Vespula germanica is an invasive exotic species.

வினா 74 · அலகு V

உயிர்க்கோள காப்பிடம் பற்றிய பின்வரும் குறிப்புகளை கருத்தில் கொண்டு எந்த ஒரு உயிர்க்கோள காப்பிடத்திற்கு பொருந்துகிறது என்று தேர்ந்தெடுக்கவும்.

(a) இது ஒரு மிகப்பெரிய அடுத்தடுத்த சதுப்பு நில பரப்பு

(b) வெப்பமண்டல அரை பசுமை மாறு காடு

(c) விவசாய அமைப்புகள், சில்விகல்சர், மீன்வளர்ப்பு, மற்றும் இறால் வளர்ப்பு

(d) உலகளாவிய மிகப்பெரிய மங்கல் உயிரிய பல்வகைமை மற்றும் இதன் முக்கிய பகுதிகள் உலக பாரம்பரிய தளமாக வடிவமைந்துள்ளது.

உயிர்க்கோள காப்பிடம் என்பது :

(A) ஷாங்கோ சதுப்புநில உயிர்க்கோள காப்பிடம் (B) கேன் ஜியோ சதுப்புநில உயிர்க்கோள காப்பிடம்

(C) மன்னர் வளைகுடா உயிர்க்கோள காப்பிடம் (D) சுந்தரவன சதுப்புநில உயிர்க்கோள காப்பிடம்

Consider the following points about a biosphere reserve?

(a) It is the largest continuous mangrove area

(b) Tropical semi-evergreen forests

(c) Agrosystems, silviculture, pisciculture and prawn culture

(d) The largest mangal diversity in the world its core area has been designated as a world heritage site.

This biosphere reserve is :

(A) Shankou mangrove biosphere reserve (B) Can Gio mangrove biosphere reserve

(C) Gulf of mannar biosphere reserve (D) Sunderbans mangrove biosphere reserve

விடை: (D) சுந்தரவன சதுப்புநில உயிர்க்கோள காப்பிடம் – சுந்தரவனம் உலகின் மிகப்பெரிய தொடர்ச்சியான சதுப்புநிலக் காடு; அதிக அலையாத்தித் தாவர வகைமை; அதன் மையப் பகுதி (சுந்தரவன தேசியப் பூங்கா) யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளம் (1987).

The Sundarbans is the largest contiguous mangrove forest with the richest mangrove (mangal) diversity; its core (Sundarbans National Park) is a UNESCO World Heritage Site (1987).

வினா 75 · அலகு IV

கன்னியாகுமரி மாவட்டம் _____ கிராமத்தில் ஆப்டிகல் ஃபைபர் கேபிள் பதிக்கும் பணி தொடங்கப்பட்டது.

(A) சின்னமுட்டம் (B) கொடிமுனை

(C) நெய்யூர் (D) முத்தலக்குறிச்சி

The work of laying Optical Fibre Cables (OFC) was initiated at _____ village of Kanyakumari District.

(A) Chinnamuttom (B) Kodimunai

(C) Neyyoor (D) Muthalakurichi

விடை: (D) முத்தலக்குறிச்சி – 9.06.2022 அன்று பாரத்நெட் (TANFINET) ஆப்டிகல் ஃபைபர் பதிக்கும் பணியை முதல்வர் கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை ஒன்றியம் முத்தலக்குறிச்சி கிராமத்தில் தொடங்கி வைத்தார்.

On 9 June 2022 the Chief Minister inaugurated the BharatNet (TANFINET) optical-fibre laying work at Muthalakurichi village, Thuckalay block, Kanyakumari district.

வினா 76 · அலகு V

பின்வருவனவற்றுள் எவை தவருக இணைக்கப்பட்டுள்ளன?

நதிகள் – துணை நதிகள்

(1) காவிரி – அமராவதி

(2) தாமிரபரணி – பாம்பாறு

(3) வைகை – பேச்சியாறு

(4) வெள்ளாறு – மஞ்சளாறு

(A) (1) மற்றும் (3)
(B) (1) மற்றும் (2)
(C) (3) மற்றும் (2)
(D) (3) மற்றும் (4)

Which of the following is incorrectly paired?

Rivers – Tributaries

(1) Cauvery – Amaravathi

(2) Thamirabharani – Pampar

(3) Vaigai – Pechiyar

(4) Vellar – Manjalar

(A) (1) and (3)
(B) (1) and (2)
(C) (3) and (2)
(D) (3) and (4)

விடை: (D) (3) மற்றும் (4) – அமராவதி காவிரியின் துணையாறு; பாம்பாறு தாமிரபரணியின் தொடக்கத் துணையாறு; மஞ்சளாறு வைகையின் துணையாறு (வெள்ளாற்றினுடையது அல்ல); பேச்சியாறு வைகையின் துணையாறு அல்ல – (3), (4) தவறு.

Amaravathi joins the Cauvery and Pambar is a headwater tributary of the Thamirabharani; Manjalar is a tributary of the Vaigai (not Vellar) and Pechiyar is not a Vaigai tributary, so (3) and (4) are wrong.

வினா 77 · அலகு I

பின்வருவனவற்றில் எது தவருக இணைக்கப்பட்டுள்ளது?

(1) இந்து சமய அறநிலைத்துறை சட்டம் – 1925

(2) மெட்ராஸ் மாநில உதவி பெறும் தொழில்துறை சட்டம் – 1923

(3) அண்ணாமலை பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது – 1929

(4) ஈ.வெ. ராமசாமி சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார் – 1930

(A) (2) மற்றும் (4) சரியானவை இல்லை
(B) (2) மற்றும் (3) சரியானவை இல்லை
(C) (3) மற்றும் (4) சரியானவை இல்லை
(D) (1) மற்றும் (4) சரியானவை இல்லை

Which of the following is incorrectly paired?

(1) Hindu Religious Endowment Act – 1925

(2) The Madras State Aid to Industries Act – 1923

(3) Annamalai University established – 1929

(4) E.V. Ramaswami launch the Self Respect Movement – 1930

(A) (2) and (4) are not correct
(B) (2) and (3) are not correct
(C) (3) and (4) are not correct
(D) (1) and (4) are not correct

விடை: (A) (2) மற்றும் (4) சரியானவை இல்லை – சென்னை மாநில தொழில் உதவிச் சட்டம் 1922-இல் நிறைவேறியது; பெரியார் சுயமரியாதை இயக்கத்தை 1925-இல் தொடங்கினார். இந்து சமய அறநிலையச் சட்டம் (1925), அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (1929) சரி.

The Madras State Aid to Industries Act was passed in 1922 (Act V of 1923) and Periyar launched the Self-Respect Movement in 1925. The HRE Act (1925) and Annamalai University (1929) are correct.

வினா 78 · அலகு I

சான்றாண்மை என்னும் மண்டபத்தைத் தாங்கும் தூண்கள் எவை? என்பதைத் தெரிவு செய்க.

(i) அன்பு, நாணம்

(ii) சுணக்கம், பிணக்கம்

(iii) மானம், வானம்

(iv) ஒப்புரவு, உண்மை, கண்ணோட்டம்

(A) (ii), (iv) மட்டும் சரி
(B) (i), (iii), (iv) மட்டும் சரி
(C) (i), (iv) மட்டும் சரி
(D) (iii), (iv) மட்டும் சரி

Choose the pillars that support the Hall of Testimony (Saandranmai Mandabam) :

(i) Love, Shy

(ii) Delay, Tiff

(iii) Dignity, Sky

(iv) Compromise, Truth, Overview

(A) (ii), (iv) are right
(B) (i), (iii), (iv) are right
(C) (i), (iv) are right
(D) (iii), (iv) are right

விடை: (C) (i), (iv) மட்டும் சரி – திருக்குறள் 983: 'அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு ஐந்துசால் ஊன்றிய தூண்' – அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்தும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள்.

Thirukkural 983: 'அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு ஐந்துசால் ஊன்றிய தூண்' – love, modesty, beneficence, kindness and truthfulness are the five pillars of perfect virtue.

வினா 79 · அலகு I

கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்ந்து சரியான கூற்று/கூற்றுகளை தேர்ந்தெடுக்கவும்.

(a) திட்டமிட்ட நகரம், தானியக் கிடங்கு மற்றும் உறை கிணறுகள் அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்டன

(b) சேரர்கள் காவேரி டெல்டா பகுதியை ஆட்சி செய்தனர். அவர்களின் தலைநகரம் உறையூர் ஆகும்

(c) சோழர்களின் சின்னம் புலி ஆகும். அவர்கள் புலி உருவம் பொறித்த சதுர வடிவிலான செம்பு நாணயங்களை வெளியிட்டார்கள்

(d) சங்க காலம் வெண்கலக் காலத்தில் இருந்து வேரூன்றத் தொடங்கியது

(A) (a) மட்டும் சரி
(B) (b) மட்டும் சரி
(C) (a) மற்றும் (c) சரி
(D) (a), (c) மற்றும் (d) சரி

Consider the following and find out the correct statement/statements.
(a) Evidence of a planned town, warehouse and ring wells are found in Arikkamedu
(b) The Cheras ruled over Kauveri delta and their capital was uraiyur
(c) The Chola emblem was the tiger and they issued square copper coins with images of a tiger
(d) The Sangam Age has its roots in the Bronze Age

(A) (a) is correct
(B) (b) is correct
(C) (a) and (c) is correct
(D) (a), (c) and (d) are correct

விடை: (C) (a) மற்றும் (c) சரி – அரிக்கமேட்டில் திட்டமிட்ட குடியிருப்பு, கிடங்கு, உறைக்கிணறுகள் கிடைத்தன; புலிச் சின்னம் கொண்ட சோழர் புலி பொறித்த சதுரச் செம்பு நாணயங்களை வெளியிட்டனர். காவிரி டெல்டா/உறையூர் சோழருடையது; சங்க காலம் இரும்புக் காலத்தில் வேரூன்றியது.
Arikamedu shows a planned settlement with warehouse and ring wells, and the early Cholas (tiger emblem) issued square copper coins with a tiger; the Kaveri delta/Uraiyur belonged to the Cholas, not the Cheras, and the Sangam Age has its roots in the Iron Age.

வினா 80 · அலகு I

தனித்தமிழ் இயக்கத்தின் விளைவுகள் :

(1) சமஸ்கிருதம் மற்றும் ஆங்கில மொழிகளின் உதவியின்றியே தமிழ்மொழி இயங்கவல்லதென நிறுவுதல்

(2) சங்கத் தமிழர் காத்து வளர்த்த தூய தமிழைக் கட்டிக்காத்தல்

(3) இந்தி மொழி ஆதிக்கத்தை மட்டும் எதிர்த்துச் செயல்படுதல்

(4) இந்தி மொழியை அகற்றி ஆங்கிலத்தை மட்டும் ஏற்றுக்கொள்ளுதல்

(A) (1) மற்றும் (2) சரி
(B) (1) மற்றும் (3) சரி
(C) (2) மற்றும் (4) சரி
(D) (2) மற்றும் (3) சரி

The effects of Independent Tamil Movement :
(1) Tamil Language can maintain its traditional integrity without the loan words from English and Sanskrit
(2) Reclaiming chaste Tamil's glory that was a pride of the Sangam Period
(3) Actively opposing the Hindi language
(4) Avoid Hindi and accept only the English words

(A) (1) and (2) correct
(B) (1) and (3) correct
(C) (2) and (4) correct
(D) (2) and (3) correct

விடை: (A) (1) மற்றும் (2) சரி – மறைமலை அடிகளின் தனித்தமிழ் இயக்கம் (1916) வடமொழி, ஆங்கிலக் கலப்பின்றித் தமிழ் இயங்க வல்லது என நிறுவி, சங்கத் தூய தமிழைக் காத்தது; அது இந்தி எதிர்ப்பு அல்லது ஆங்கில ஏற்பு இயக்கம் அல்ல.
The Pure (Thani) Tamil Movement of Maraimalai Adigal (1916) showed Tamil can function without Sanskrit/English loan words and sought to restore the chaste Tamil of the Sangam age; it was not merely anti-Hindi or pro-English.

வினா 81 · அலகு I

பின்வரும் சொற்றொடர்களில் எது/எவை சரியானவை?

(1) நீதிக்கட்சியின் கூட்டங்கள் ஆங்கிலத்தில் மட்டுமே நடைபெற்றன.

(2) இந்தியதேசிய காங்கிரசின் கூட்டங்கள், பொது மக்களைக் கவருவதற்காக, தமிழிலும் நடந்தன.

(3) 1927 ஆம் ஆண்டு டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி சட்டமன்றத்தின் துணை சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

(A) (1) மட்டும் சரியானது
(B) (2) மட்டும் சரியானது
(C) (1) மற்றும் (2) சரியானவை
(D) (1), (2) மற்றும் (3) சரியானவை

Which of the following statements is/are correct?
(1) Meetings of the Justice Party held in English only
(2) Meetings of the Indian National Congress held in Tamil also in order to attract common people
(3) Dr. Muthulakshmi Reddy was elected as Deputy Speaker of Legislature in 1927

(A) (1) only correct
(B) (2) only correct
(C) (1) and (2) are correct
(D) (1), (2) and (3) are correct

விடை: (D) (1), (2) மற்றும் (3) சரியானவை – நீதிக்கட்சிக் கூட்டங்கள் ஆங்கிலத்தில் நடந்தன; மக்களைக் கவர காங்கிரஸ் தமிழையும் பயன்படுத்தியது; டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி 1927-இல் சட்ட மேலவை துணைத் தலைவரானார்.
Justice Party meetings were conducted in English, while Congress also used Tamil to reach the masses. Dr. Muthulakshmi Reddy became Deputy President of the Madras Legislative Council in 1927.

வினா 82 · அலகு I

சத்தியாகிரகிகள் உப்புச் சட்டத்திற்கு எதிராக தஞ்சை நோக்கி சென்றபோது பின்வருபவரில் யார் தஞ்சை மாவட்ட ஆட்சியராக இருந்தார்?

(A) க. சந்தானம்
(B) ஏ.ஜே. ராஜன்
(C) ஜி. ராமசந்திரன்
(D) செல்வி துர்காபாய்

Who among the following was the collector of Tanjore when Satyagrahis marched towards Tanjore, against salt law?

(A) K. Santanam
(B) A.J. Rajan
(C) G. Ramachandran
(D) Selvi Durgabai

விடை: கொடுக்கப்பட்ட விருப்பங்களில் எதுவும் முழுமையாகச் சரியில்லை (அருகிலுள்ளது: (B)) – வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தின்போது (ஏப்ரல் 1930) தஞ்சை ஆட்சியர் ஜே.ஏ. தார்ன்; அவர் பெயர் விடைகளில் இல்லை.

During the Vedaranyam salt march (April 1930) the Collector of Tanjore was J.A. Thorne, who is not among the options. Santanam, G. Ramachandran and Durgabai were nationalists.

வினா 83 · அலகு I

சென்னை மகாஜன சபை எப்போது தொடங்கப்பட்டது?

(A) மே 17, 1884
(B) மே 26, 1884
(C) மே 16, 1884
(D) மே 6, 1884

When Madras Mahajana Sabha was started?

(A) May 17, 1884
(B) May 26, 1884
(C) May 16, 1884
(D) May 6, 1884

விடை: (C) மே 16, 1884 – சென்னை மகாஜன சபை 16 மே 1884 அன்று எம். வீரராகவாச்சாரி, ஜி. சுப்பிரமணிய ஐயர், பி. ஆனந்தசார்லு முதலியோரால் தொடங்கப்பட்டது; முதல் தலைவர் பி. ரங்கையா நாயுடு.

The Madras Mahajana Sabha was founded on 16 May 1884 by M. Viraraghavachari, G. Subramania Iyer, P. Ananda Charlu and others, with P. Rangaiah Naidu as first president.

வினா 84 · அலகு I

பின்வரும் தமிழறிஞர்களை காலமுறைப்படி வரிசைப்படுத்துக.

(1) மாயூரம் வேதநாயகம் பிள்ளை
(2) வேதநாயக சாஸ்திரியார்
(3) தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்
(4) எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை

(A) (1), (2), (4), (3)
(B) (2), (1), (3), (4)
(C) (2), (1), (4), (3)
(D) (3), (4), (2), (1)

Arrange the following Tamil Scholars in chronological order :

(1) Mayooram Vedanayagam Pillai
(2) Vedanayagam Sastriar
(3) Thanjavur Abraham Pandithar
(4) H.A. Krishnapillai

(A) (1), (2), (4), (3)
(B) (2), (1), (3), (4)
(C) (2), (1), (4), (3)
(D) (3), (4), (2), (1)

விடை: (C) (2), (1), (4), (3) – வேதநாயக சாஸ்திரியார் (பி. 1774), மாயூரம் வேதநாயகம் பிள்ளை (பி. 1826), எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை (பி. 1827), ஆபிரகாம் பண்டிதர் (பி. 1859) – வரிசை 2, 1, 4, 3.

Vedanayagam Sastriar (b. 1774), Mayuram Vedanayagam Pillai (b. 1826), H.A. Krishna Pillai (b. 1827) and Abraham Pandithar (b. 1859) – order 2, 1, 4, 3.

வினா 85 · அலகு I

பேசின் உடன்படிக்கை (1802) தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானது/சரியானவை?

(i) பேசின் உடன்படிக்கை பேஷ்வா இரண்டாம் பாஜிராவ் மற்றும் ஆங்கிலேயருக்கு இடையில் கையெழுத்தானது.

(ii) பேஷ்வா 26 லட்சம் ரூபாய் வருமானம் தரும் பிரதேசங்களைக் கம்பெனிக்கு நிரந்தரமாக விட்டுக்கொடுக்க ஒப்புக்கொண்டார்.

(iii) பேஷ்வா சூரத் நகரைக் கம்பெனியிடம் ஒப்படைக்க ஒப்புக் கொண்டார்.

(A) (i) மட்டும்
(B) (i) மற்றும் (iii) மட்டும்
(C) (i) மற்றும் (ii) மட்டும்
(D) (i), (ii) மற்றும் (iii)

Which of the following statements is/are true regarding the Treaty of Bassein (1802)?

(i) The Treaty of Bassein was signed between Peshwa Baji Rao II and the British.

(ii) Peshwa agreed to cede in perpetuity to the company territories yielding an income of 26 lakhs rupees.

(iii) Peshwa agreed to surrender the city of surat to companies.

(A) (i) only
(B) (i) and (iii) only
(C) (i) and (ii) only
(D) (i), (ii) and (iii)

விடை: (D) (i), (ii) மற்றும் (iii) – பேசின் உடன்படிக்கை (31.12.1802): இரண்டாம் பாஜிராவ் துணைப்படைத் திட்டத்தை ஏற்று, ஆண்டுக்கு ரூ.26 லட்சம் வருமானம் தரும் பகுதிகளையும் சூரத் நகரையும் கம்பெனிக்கு விட்டுக்கொடுத்தார்.

By the Treaty of Bassein (31 Dec 1802) Baji Rao II accepted subsidiary alliance, ceded territories yielding Rs 26 lakh a year and surrendered the city of Surat to the Company.

வினா 86 · அலகு II

கொள்கை மற்றும் திட்டம் தொடர்பாக V.N. காட்கில் குழு உருவாக்கப்பட்ட ஆண்டு

(A) 1978
(B) 1980
(C) 1982
(D) 1988

V.N. Gadgil committee on policy and programmes was constituted in the year

(A) 1978
(B) 1980
(C) 1982
(D) 1988

விடை: (D) 1988 – வி.என். காட்கில் தலைமையிலான கொள்கை மற்றும் திட்டக் குழு 1988-ல் அமைக்கப்பட்டது; பஞ்சாயத்து ராஜ் அமைப்புக்கு அரசியலமைப்பு அந்தஸ்து பரிந்துரைத்தது (64-வது திருத்த மசோதா 1989).

The Committee on Policy and Programmes headed by V.N. Gadgil was set up by the Congress party in 1988; its recommendations on constitutional status for Panchayati Raj led to the 64th Amendment Bill (1989).

வினா 87 · அலகு II

கீழ்க்கண்டவற்றில் சரியான பொருத்தத்தைக் கண்டறிக.

அமைப்புகள் – விதிகள்

(1) பாராளுமன்றம் – 124 முதல் 147

(2) ஒன்றிய நீதித்துறை – 79 முதல் 122

(3) அரசு வழிகாட்டும் நெறிமுறைக் கோட்பாடு – 36 முதல் 51

(4) அரசு பணியாளர் தேர்வாணையம் – 315 முதல் 323

(A) (1) மற்றும் (3) சரி
(B) (1) மற்றும் (2) சரி
(C) (2) மற்றும் (3) சரி
(D) (3) மற்றும் (4) சரி

Choose the correct matches among the types.

Organisation – Articles

(1) Parliament – 124 to 147

(2) The Union Judiciary – 79 to 122

(3) Directive Principles of State Policy – 36 to 51

(4) Public Service Commission – 315 to 323

(A) (1) and (3) are correct
(B) (1) and (2) are correct
(C) (2) and (3) are correct
(D) (3) and (4) are correct

விடை: (D) (3) மற்றும் (4) சரி – பாராளுமன்றம் – விதிகள் 79–122, ஒன்றிய நீதித்துறை – 124–147 (இடம் மாறியுள்ளன); வழிகாட்டு நெறிமுறைகள் 36–51, பணியாளர் தேர்வாணையங்கள் 315–323 சரி.

Parliament is Arts 79–122 and the Union Judiciary Arts 124–147 (swapped in the list); DPSP Arts 36–51 and Public Service Commissions Arts 315–323 are correct.

வினா 88 · அலகு IV

தமிழ்நாட்டில், இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியதற்காக, முதலமைச்சரை, மக்கள் "தாயுமானவர்" என்று அழைக்கின்றனர்.

(A) பள்ளியில் காலை உணவு
(B) விடியல் பயணத் திட்டம்
(C) நீங்கள் நலமா
(D) மக்களுடன் முதல்வர்

People in Tamil Nadu Greets Chief Minister as "Thayumanavar" (Man who becomes Mother) for the introduction of the scheme.

(A) Breakfast in schools
(B) Vidiyal Payana Thittam
(C) Neengal Nalama
(D) Makaludan Mudalvar

விடை: (A) பள்ளியில் காலை உணவு – பள்ளிக் குழந்தைகளுக்குத் தாயைப் போலக் காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தால் (2022) முதல்வர் 'தாயுமானவர்' எனப் போற்றப்பட்டார்.

Providing a mother's care of morning food to school children through the Chief Minister's Breakfast Scheme (2022) earned the CM the praise 'Thayumanavar' (one who became a mother).

வினா 89 · அலகு V

அத்திக்கடவு-அவினாசி திட்டம் தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுக்களுள் எவை சரியானவை?

(i) கோயமுத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள் இத்திட்டத்தால் பலனடைகின்றன.

(ii) ஈரோடு மாவட்டத்தில் உள்ள காளிங்கராயன் அணையிலிருந்து 1.5 டி.எம்.சி உபரி நீரை இத்திட்டத்திற்காக எடுக்க உத்தேசிக்கப்பட்டது.

(iii) இத்திட்டம் 2456.41 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு, மேற்குறிப்பிட்ட மாவட்டங்களின் 28,464 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன நீர் வழங்குகிறது.

(A) (i) மட்டும்
(B) (i) மற்றும் (iii) மட்டும்
(C) (i) மற்றும் (ii) மட்டும்
(D) (ii) மற்றும் (iii) மட்டும்

Which of the following statements are true about Athikadavu – Avinashi project?

(i) Coimbatore, Tirupur and Erode Districts are the beneficiaries of this project.

(ii) This project proposes to take 1.5 TMC of surplus water from the Kalingarayan anicut in Erode District.

(iii) This project was implemented at a cost of 2456.41 crores and irrigate 28,464 acres of farmlands in these districts.

(A) (i) only
(B) (i) and (iii) only
(C) (i) and (ii) only
(D) (ii) and (iii) only

